Registe... as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 26 திங்கட்கிழமை (10.07.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 224



## யாழ். மேலதிக நீதிவான் ஸ்ரீநிதியின் காரை துரத்திச் சென்று படையினர் சுட முயற்சி!

### பொதுமக்கள் திரண்டு தடுத்தனர்! பரமேஸ்வராச்சந்திப் பகுதியில் பரபரப்பு!!

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் உத்தியோகபூர்வ வாகனத்தின் மீது நேற்றுக்காலை இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயன்றனர். எனினும், படையினர் அந்த வாகனத்தைத் துரத்திச் செல்வதைக் கண்ட பொதுமக்கள் உஷாரடைந்து கூச்சலிட்டதால் நிகழவிருந்த விபரீதம் தடுக்கப்பட்டது.

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்குச் சமீபமாக நேற்றுக்காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

யாழ்.நகரில் றக்கா வீதியில் அமைந்துள்ள மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனின் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற அவரது காரின் மீதே படையினர் தாக்குதல் நடத்த முயன்றிருக்கின்றனர். நீதிவானின் பத்து வயதான மகனை திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு ஏற்றிச்சென்ற கார், மகனை அங்கு இறக்கி விட்டுப் பலாலி வீதிவழியாக மீண்டும் நீதிவானின் இல்லத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்த வழியிலேயே பலாலி வீதியில் காவற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனின் காரைத் துரைத்திச் சுட முயற்சித்த சம்பவம் தொடர்பாக மூன்று படையினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்; ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இனிமேல் அரசுடன் ஒத்துழைப்பதில்லை

# ஐ.தே.க. முடிவு; இந்தியாவுக்கும் தகவல்!

## கட்சியை பலவீனப்படுத்தும் அரசின் நடவடிக்கைகளால் ரணில் சீற்றம்

கொழும்பு,ஜூலை10

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அரசின் எந்தவொரு முயற்சிக்கும் இனிவரும் காலத்தில் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி முடிவுசெய்துள்ளது. கட்சியைப் பலவீனப்படுத்தும் உள்நோக்கத்துடன் அரசு நடந்துகொள்வதனால் அமைதி முயற்சிகள் மற்றும் இதர முக்கியமான விடயங்களில் அரசுக்கு வழங்கி வந்த ஒத்துழைப்புகளை உடன் நிறுத்தவும் ஐ.தேக. தயாராகிவிட்டது. இந்த விடயம் குறித்த தனது நிலைப்பாட்டை அது இந்தியாவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதாகவும் அறிய முடிகின்றது.**

ஸ்தம்பித்துப் போயிருக்கும் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்காக இலங்கையில் அரசும், பிரதான எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட வேண்டுமென கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் ஷியாம் சரண் வலியுறுத்தியிருந்தார். இதனையடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பு நடந்த தினத்தன்றே ஐ.தே.கவின் உறுப்பினரான சுசந்த புஞ்சிநிலமே ஆளுந்தரப்புக்குத் தாவி பிரதியமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இந்த நிலைமையினால் ஆத்திரமடைந்துள்ள ஐ.தே.க. தலைமை இனிமேல் அரசுடன் புரிந்துணர்வுடன் நடக்காதிருக்கத் தீர்மானித்து விட்டது. இது குறித்து புதுடில்லிக்கு அறிவுறுத்தியிருக்கும் ஐ.தே.கட்சி, இந்த நிலைமைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே முழுக்காரணமெனத் தெரிவித்திருக்கின்றது.

இதன்படி சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வது உட்பட அமைதி முயற்சிகளில் அரசுக்கு எதுவித ஒத்துழைப்பையும் வழங்காதிருக்க ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் இந்த முடிவு குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட புதுடில்லி சென்று இந்திய ராஜதந்திரிகளிடம் விளக்கமளித்துள்ளார். (ம)

### வவுனியா பகுதியில் வெடிமருந்துகள் மீட்பு!

வவுனியா,ஜூலை10

வவுனியா, இராசேந்திரகுளம் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து ஒருதொகை வெடிமருந்துப் பொருள்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

'சி நான்கு' ரக வெடிமருந்துப் பொருள்கள் 15 கிலோவும், 4 கைக் குண்டுகள், ரி - 56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் ரவைகள், புலிகள் இயக்கத்தின் சீருடைகள் என்பனவே கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி நேற்று கண்டிக்கு விஜயம்


கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு, நேற்றுக்காலை கண்டி நகருக்குச் சென்றார்.

கண்டி சென்ற ஜனாதிபதி தலதா மாளிகைக்குச் சென்று அங்கு சமயவழிபாட்டில் ஈடுபட்டார். இதன் பின்னர் தலதா மாளிகையிலுள்ள நூலகத்துக்குச் சென்று, அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருக்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## உலகக் கிண்ணத்தை வசப்படுத்தியது இத்தாலி



பேர்லின்,ஜூலை10

ஜேர்மனித் தலைநகர் பேர்லினில் நடைபெற்ற 13ஆவது உலகக் கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியில் இத்தாலி அணி 5:3 என்ற சமநிலை தகர்ப்பு உதை கோல்கள் மூலம் வெற்றிபெற்றது. 4ஆவது முறையாக உலகக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வரலாற்றில் இரண்டாவது தடவையாக கால்பந்து இறுதியாட்டம் சமநிலை தகர்ப்பு உதை மூலம் முடிவுக்கு வந்தது. இதற்கு முன் 1994 இல் இதேபோன்று இத்தாலி அணியை பிறேசில் வென்றது.

ஆட்டம் முடிவதற்கு 10 நிமிடங்கள் முன்பாக பிரான்ஸ் அணித் தலைவர் ஜிடேன் எதிரணி வீரரை தாக்கியதற்காக சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் அவர் இன்றியே சமநிலை தகர்ப்பு உதைகளை சந்திக்க வேண்டிய இக்கட்டுக்கு அணி உள்ளானது. அவர் மிகச் சிறந்த சமநிலை தகர்ப்பு உதை வீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆட்டத்துடன் ஜிடேன் உலகக் கால்ப்பந்தாட்டங்களில் இருந்து ஓய்வு பெற்றார்.

விறுவிறுப்பாக நடந்த இறுதியாட்டம், குறித்த 90 நிமிடங்களுக்குள் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. இரு தடவைகள் கொடுக்கப்பட்ட மேலதிக நேரத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் போடவில்லை. இதனையடுத்து சமநிலை தகர்ப்பு உதை மூலம் முடிவு காணப்பட்டது.

## அடுத்த ஒருவார காலத்தினுள் அமைச்சரவை மறுசீரமைப்பு

### சுபநேரம் பார்த்து காத்திருக்கிறாராம் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை10

இன்னும் ஒருவார காலத்திற்குள் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்ளதாக அரச உயர்மட்ட வட்டாரங்கள் கூறின.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இவ்வாரம் அரசுடன் இணையவுள்ளனர் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்த அமைச்சரவை மறுசீரமைப்பை அடுத்தவாரம் மேற்கொள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தேசித்துள்ளார்.

இந்த அமைச்சரவை மறுசீரமைப்பின் போது இப்போதுள்ள அமைச்சர்கள் பலரின் பொறுப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பதில் இராணுவத் தளபதியாக நந்த மல்லவராச்சி நியமனம்

கொழும்பு,ஜூலை10

இலங்கை இராணுவத்தின் பதில் தளபதியாக மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்கொலைத் தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தற்போது சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதால் அவர் கடமைக்குத் திரும்பும்வரை பதில் தளபதியாக நந்த மல்லவராச்சி கடமையாற்றவுள்ளார்.

இராணுவத் தளபதி சிகிச்சைக்காகச் சென்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு மாணவர் சென்றுவருவதில் கட்டுப்பாடு

## படையினர் இறுக்கமான நிலை

யாழ்ப்பாணம்,ஜூலை10

இராணுவ அதியுயர் பாதுகாப்புக் பகுதிக்குள் அமைந்திருக்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்களின் போக்குவரத்து விடயத்தில் படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

பலாலி இராணுவத் தளத்தை அண்டியுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளது யூனியன் கல்லூரி. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் முன்னணி இராணுவத் தடைமுகாமைத் தாண்டி அதிக கெடுபிடிகள் இன்றி பாடசாலைக்குச் சென்றுவர அனுமதிக்கப்பட்டனர். கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இதில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடந்த சுமார் ஒரு மாத காலத்தின் முன்னர், பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் முன்னணித் தடை முகாமில் தமது அடையாள அட்டைகளை ஒப்படைத்த பின்பே பாடசாலைக்குச் செல்ல முடியும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

தற்போது, காலையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை நேரம் முடிந்த பின்பே முன்னணித் தடை முகாமைத் தாண்டி வெளியேற முடியும் என்ற இறுக்கமான கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இடைப்பட்ட நேரத்தில் பாடசாலையில் இருந்து எவரும் வெளியேறிச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று இராணுவ அதிகாரிகள் பாடசாலை அதிபருக்கு அறிவித்துள்ளனர்.

இதனால் ஆசிரியர் அல்லது மாணவர் சுகவீனமுற்றாலோ, வேறு அவசர அலுவலகத் தேவைகளுக்காகவோ எவரும் யாழ். நகருக்கு அல்லது வேறு இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பாடசாலை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ம-86)

# தென்மராட்சி வலய அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,ஜூலை10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் செயற்றிட்டங்களின் மீளாய்வு கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற செயற்றிட்டங்கள் தொடர்பான மீளாய்வு அறிக்கையினையும் கணக்கு அறிக்கையினையும் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

இதேவேளை, தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரச பொதுத்துறை சார்ந்த நிறுவன ஊழியர்களின் தொகை மதிப்பு படிவங்கள் அன்றைய தினம் விநியோகிக்கப்படவுள்ளதால் அனைத்து பாடசாலை அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (117)

# நெல்லியடி தடங்கன் புளியடியில் பொலிஸாரால் 3 கிரனேட்டுகள் மீட்பு

கரவெட்டி, ஜூலை10

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வீதி ஓரத்தில் 3 கிரனேட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து 3 கிரனேட்டுகளை நெல்லியடிப் பொலிஸார் மீட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

வெடிக்காத நிலையில் காணப்பட்ட கிரனேட்டுக்களைக் கண்ட மக்கள் கிராம சேவையாளரிடம் தெரிவித்துள்ளனர். கிராம சேவகர் உடனடியாகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தினரின் உதவியுடன் நெல்லியடி பொலிஸாரால் கிரனேட்டுக்கள் மீட்கப்பட்டன.

இதற்கிடையில் - நெல்லியடி மகாத்மா தியேட்டருக்கு சமீபமாக நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் படையினரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அப்பகுதியில் பெரும் களேபரம் ஏற்பட்டது.

வேட்டுச்சத்தங்களை அடுத்து பீதியடைந்த மக்கள் அங்கும் இங்குமாக சிதறி ஓடினர். இவ்வாறு சிதறி ஓடிய மக்களை சுற்றிவளைத்த படையினர் அது தவறுதலாக இடம்பெற்ற வேட்டு எனத் தெரிவித்தனராம். (70)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை10

உளவளத் துணையாளர்களுக்கான கலந்துரையாடலொன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சென் பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் சான்றிதழ் பயிற்சி பெற்ற அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ரி)

# திருமலை அரச அதிபராக கடற்படை அதிகாரி: நிர்வாக சேவையாளர் சங்கம் கண்டனம்

கொழும்பு,ஜூலை10

திருகோணமலை மாவட்டத்துக்கு ஓய்வு பெற்ற படை அதிகாரி ஒருவர் அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமைக்கு இலங்கை நிர்வாக சேவையாளர் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மாவட்ட நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்படும் ஒருவர் இலங்கை நிர்வாக சேவைகள் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவேண்டும். இதனை அடுத்தே ஓய்வுபெற்ற படை அதிகாரி ஒருவர் நிர்வாக சேவையின் முக்கிய பதவியில் நியமிக்கப்பட்டமை பல தரப்பினராலும் கண்டிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை நிர்வாக சேவையாளர் சங்கத்தின் செயலாளர் சந்திரரட்ண பல்லேகம இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இந் நியமனம் முறையற்றது என்றும் இது உரிய முறையில் பரிசீலிக்கப்படாவிட்டால் நாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் தெரிவித்தார். (க-ரி)

# குப்பிவிளக்கு சரிந்து தீப்பற்றியதில் நவாலியில் மூதாட்டி ஒருவர் மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூலை10

குப்பிவிளக்கு சரிந்து தீப்பற்றியதால் எரிகாயங்களுக்கு உள்ளான மூதாட்டி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நவாலி கிழக்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்லையா இராசமணி (வயது 79) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப மூதாட்டி தனது வீட்டில் தனித்திருந்தார் என்றும் நேற்றுமுன்தினமிரவு தூங்கிக்கொண்டிருந்த வேளை குப்பி விளக்கு சரிந்து அவரது ஆடையில் தீப் பற்றிக் கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூதாட்டியின் வீட்டிலிருந்து அவலக் குரல் கேட்டதையடுத்து அயலவர்கள் ஓடி வந்து பார்த்தபோது மூதாட்டி பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

அவரை உடனடியாக மீட்ட அயலவர்கள் அதிகாலை 2 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர். அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட மேற்படி மூதாட்டி சிகிச்சை பயனளிக்காது நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-ரீ-100)

# இந்திய எண்ணெய் நிறுவனத்தை அரசுடமையாக்க வேண்டி ஏற்படும்!

## அமைச்சர் பௌசி எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை10

இலங்கையில் உள்ள இந்திய எண்ணெய் நிறுவனமான லங்கா ஐ.ஓ.சி. தொடர்ந்தும் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தி வைத்திருக்குமானால் அதனை அரசுடமையாக்க வேண்டிவரும் என்று அரசு எச்சரித்துள்ளது.

பெற்றோலியத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி இந்தப் பகிரங்க எச்சரிக்கையை விடுத்துள்ளார். ''இந்திய நிறுவனத்திற்கு 30 நாள்கள் காலக்கெடு விதித்துள்ளோம். அதற்குள் அந்த நிறுவனமானது எரிபொருளை இறக்குமதி செய்து தனது நிலையங்கள் மூலம் விநியோகிக்க வேண்டும்'' - என்று தெரிவித்தார் அமைச்சர்.

ஐ.ஓ.சி. அவ்வாறு நடந்துகொள்ளாது விட்டால் அதன் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அரசு கையகப்படுத்திக்கொள்ளும் என்றும் அமைச்சர் பௌசி கூறினார்.

இலங்கை அரசு எரிபொருள் விநியோகத்துக்காக கடந்த ஆண்டுகளில் ஐ.ஓ.சிக்கு பெருந் தொகைப் பணத்தை நிலுவையாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. கடந்த மாதம் இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களில் இந்தப் பிரச்சினை குறித்து ஓர் இணக்கம் எட்டப்பட்டது. எனினும் ஐ.ஓ.சி. தனது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இதுவரை விநியோகத்தை ஆரம்பிக்கவில்லை.

இதனை அடுத்தே இலங்கை அரசு இந்த இறுக்கமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட லங்கா ஐ.ஓ.சி.நிறுவன அதிகாரி கே.இராமகிருஷ்ணன், ''எமது நிறுவனத்துக்கான நிலுவைத் தொகை குறித்த பிரச்சினை கடந்த மாதம் முடிவுக்கு வந்து விட்டது. இருப்பினும் தீர்க்கப்பட வேண்டிய சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமல் உள்ளது. அடுத்த வாரம் அல்லது ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும்'' - என்றார். (ம)

# இந்தியாவுக்கான தூதராக காமினியின் மனைவி?

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக காமினி திஸநாயக்கவின் மனைவி சிறிமா நியமிக்கப்படக்கூடும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆண்டின் இறுதிக்கு முன்னதாக அவர் இப்பதவியில் நியமிக்கப்படலாம். அரசுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி கசிந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் காமினி திஸநாயக்க குடும்பத்தினருக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கும் நெருக்கமான உறவு இருந்து வருகிறது.

காமினி கொல்லப்பட்ட பின்னரும் குறிப்பாக ராஜபக்ஷவின் சகோதரர் பாசில் ராஜபக்ஷ குடும்பத்தாருக்கும் காமினி குடும்பத்தாருக்கும் நெருங்கிய உறவு இருப்பதால் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ம)

# மண்டபம் அகதி முகாமில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார்

கொழும்பு,ஜூலை10

மண்டபம் அகதிமுகாமில் இருந்த இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் இந்திய பொலிஸாரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டதாகக் கூறியும் -

மண்டபம் முகாமில் பொலிஸாரின் கெடுபிடிகள் அதிகமாக உள்ளன என்று கூறியும் -

அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் கடந்த வெள்ளியன்று வீதி மறியல் போராட்டத்தில் குதித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் தியாகராஜன் மதுஷன் என்ற இளைஞரே காயமடைந்தவராவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மண்டபம் அகதி முகாம் பகுதி பொலிஸ் அதிகாரி வெள்ளையன் பி.பி.ஸி. தமிழோசைக்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

அரசியல் விடயம் தொடர்பாக அந்தப் பையனிடம் விசாரிக்கப்பட்டது. அதனை அடுத்து அவனுக்கு அடித்ததாகக்கூறி எல்லாரும் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பிச்சிட்டாங்க.

பின்னர் அவர்களுடன் பேசி, இதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறி பையனையும் வைத்தியசாலையில் சேர்த்திட்டோம். பின்னர் அமைதியாக எல்லோரும் சென்று விட்டனர். அவ்வளவுதான் நடந்தது - என்றார். (க)

# புலிகள் பகுதிக்குள் ஊடுருவிய கருணா குழு உறுப்பினர் கைது!

திருகோணமலை,ஜூலை 10

திருகோணமலை ஈச்சிலப்பற்று பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நேற்றுமுன்தினம் கிளைமோர் குண்டுகள் மற்றும் ஆயுதங்களுடன் ஊடுருவ முயன்ற கருணா குழு உறுப்பினர் ஒருவர் புலிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

கதிரவெளி புதூரைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் என்பவரே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் புலிகளால் கைதுசெய்யப்பட்டார். புலிகளின் நிர்வாகப் பகுதிகளில் கிளைமோர் தாக்குதல்கள் மற்றும் பதுங்கித் தாக்குதல்களை மேற்கொள்ளும் நோக்கத்துடனேயே இந்த நபர் ஊடுருவினார் என்று புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (க)

# கிராம அலுவலரின் அசமந்தம் காரணமாக இரு நாள்களாக தூக்கில் தொங்கிய சடலம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

கிராம அலுவலரின் அசமந்தம் காரணமாக பெண் ஒருவரின் சடலம் இரண்டு நாள்களாகத் தூக்கில் தொங்கிய நிலையிலேயே கிடந்தது. இந்தச் சம்பவம் கோண்டாவில் வடக்கு, அன்னங்கைப் பகுதியில் இடம்பெற்றது.

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தயாரான சிவலிங்கம் பரமேஸ்வரி (வயது 49) என்பவரின் சடலமே இவ்வாறு இரு நாள்களாக தூக்கில் தொங்கியபடி இருந்தது.

வறுமை நிலையில் இருந்த பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திடீரென வீட்டுக்கூரையில் சடலமாகத் தொங்கக் காணப்பட்டார். திடீர் மரணம் என்பதனால் மரண விசாரணைகளை நடத்துவதற்கும் சடலத்தை கீழே இறக்குவதற்கும் அங்கு கிராம அலுவலரின் பிரசன்னம் அவசியமாக இருந்தது.

எனினும் குறித்த பகுதி கிராம அலுவலர் விடுப்பில் இருக்கிறார் என்று கூறப்பட்ட காரணத்தால் சம்பவ இடத்திற்கு வர மறுத்துவிட்டார் என்று கூறப்பட்டது. கிராம அலுவலர் இன்றி அந்த இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொள்வதற்குப் பொலிஸாரும் மறுத்து விட்டனர்.

இதனால் கீழே இறக்க முடியாத நிலையில் பெண்ணின் சடலம் தொங்கியபடியே இருந்தது. நேற்றுக் காலை கிராம அலுவலரைத் தேடிச் சென்ற ஊர் இளைஞர்கள் வீட்டில் அவரைக் கண்டுபிடித்தனர். நீண்ட நேர வாக்குவாதங்களுக்குப் பின்னரே ஒரு வழியாக சடலத்தைப் பார்வையிட கிராம அலுவலர் இணங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் நேற்று நண்பகல் அளவிலேயே சடலத்தை தூக்கில் இருந்து இறக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னரே சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கிராம அலுவலரின் இந்த அசண்டையீனம் குறித்து யாழ். மேலதிக நீதிவானின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கண்காணிப்புக் குழுச் சிக்கல்: காரணம் விடுதலைப் புலிகளா?

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன் கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் எழுப்பியிருக்கும் கேள்வி தமிழர்களை ஆச்சரியத்துக்குள்ளும் - அதே நேரம் பெரும் விசனத்துக்குள்ளும் - ஆழ்த்தியிருக்கின்றது.

தற்போதைய யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களில் அதிக மானோரை அப்பணியிலிருந்து விலகுமாறு புலிகள் கோரு வதற்கு நியாயமான காரணம் ஏதுமில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர், "அப்படி அவர்களை விலகுமாறு வலியுறுத்துவதன் மூலம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவர அவர் கள் விரும்புகின்றார்களா?" - என்றும் கேள்வி எழுப்பி யிருக் கின்றார்.

"தன்னுடைய நிபந்தனையில் புலிகள் இயக்கம் உறுதியாக இருக்குமானால் அப்படித்தான் விளங்கிக் கொள்ளவேண்டியி ருக்கும்." - என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

'விடிய, விடிய இராமாயணம்; விடிந்த பின்னர் சீதைக்கு இராமன் என்ன முறை என்று கேட்டானாம்'- என்பது போல இருக்கின்றது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் இக்கருத்துகள்.

புலிகள் தற்போது வலியுறுத்தும் நிலைப்பாட்டுக்கான கார ணங்களைப் புரிந்து கொள்ளாதவர்போல அவர் பேசுகின்றார்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரப் புலிகள் விரும்புகின்றார்களா என்று புலிகளைப் பார்த்துக் கேட்பதை விடுத்து, அதை முடிவுக்குக் கொண்டுவர வாய்ப்பளித்துள்ளீர்களே என்று மேற்படி யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தமது நாடான சுவீடன் மற்றும் டென்மார்க், பின்லாந்து ஆகியவற்றை யும் அவை இடம்பெற்றிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் பார்த்துத்தான் கேட்கவேண்டும். அதுதான் நியாயமானது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அவர்களே!

பல்லாயிரக்கணக்கில் தமது உயிர்களையும், மிகப் பெறுமதியான உடைமைகளையும், ஓரிரு சந்ததிக்குரிய முழு வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியையும் - தியாகம் செய்து - ஆகுதியாக்கி - ஒரு பெரும் விடுதலைப் போராட்டத்தை ஈழத் தமிழர்கள் முன்னெடுக் கின்றார்கள் என்றால் அதன் ஊடுபொருளாக - ஆன்மாவாக - இருக்கின்ற இனத்தின் வேணவாவைப் புரிந்து கொள்ளுங்கள். அது வெறும் மொழி, இன, தாயக உரிமைக்கான தாகம் மட்டுமல்ல. கௌரவமான வாழ்வுக்குரிய தீராத தேடலும் கூட. அடிபணிந்து, காலில் விழுந்து உரிமை பெறுவதற்கான வெறும் ஆயுதப் போராட் டமல்ல இது. கௌரவத்தோடு, மானம், மரியாதையுடன் சீவிப் பதற்கான - இருப்பியல் - உரிமைக்கான ஈகப் போராட்டம் இது.

அடக்குமுறை ஆட்சியைத் தொடரும் தென்னிலங்கைச் சிங்களத்திடம் கௌரவமான வாழ்வுரிமை வேண்டிப் போராடும் தமிழினம், அதற்காக மேற்குலகிடம் மண்டியிட்டு அகௌர வப்பட மாட்டாது. மானமுள்ள தமிழரின் விடுதலைப் போராட் டத்தில் அதுவும் ஓர் அம்சம் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை, உங்களின் நாடான சுவீடன் மற்றும் உங்களின் சக கண்காணிப்பாளர்களின் நாடுகளான டென்மார்க், பின்லாந்து ஆகியவை அடங்கிய ஐரோப்பிய ஒன்றியம், தனது பயங்கரவாத இயங்கங்களின் பட்டியலில் சேர்த்துத் தடை செய்ய முஸ்தீபு செய்தபோதே இதே பத்தியில் இந்த விளைவுகள் குறித்துத் தெளிவாகவும் விளக்கமாகவும் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தோம். அத்தகைய உத்தேசத் தடை வருமானால் இந்த மூன்று நாட்டுக் கண்காணிப் பாளர்களும் அப்பணியைத் தொடர்வதற்கான தகைமையை தாங்களா கவே இழந்து விடுவார்கள் என்று சுட்டிக்காட்டியிருந்தோம்.

இதையெல்லாம் கவனத்தில் எடுக்காமல் - அல்லது தமிழர் தரப்பைக் கிள்ளுக் கீரையாக உதாசீனம் செய்துவிட்டு - தமது நாட்டுப் பிரதிநிதிகள் இலங்கையில் யுத்த நிறுத்தக் கண்காணிப் பில் ஈடுபட்டிருக்கும் யதார்த்தத்தைப் புறக்கணித்து - மேற்படி ஐரோப்பிய ஒன்றியத் தடை முடிவு ஏகமனதாக மேற்கொள்ளப் படுவதற்கு இணங்கிப்போன உங்களின் மூன்றுநாடுகளும், அந்த மூன்று நாடுகளுக்கும் ஏனைய மேற்குலகத் தரப்புகளுக்கும் மேற்படி முடிவால் எழக்கூடிய இந்த நிலைமையின் விபரீதத்தை எடுத்துரைத்து விளக்க மறந்த அல்லது மறுத்த பொறுப்பான (ஒரு வகையில் பொறுப்பற்று நடந்த) தரப்புகளும்தான் இந்த இக்கட்டு நிலைக்குக் காரணம். தமிழர்களோ, புலிகளோ இதற்குக் காரணர் அல்லர் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

புலிகள் மீதான இலங்கை அரசின் தடை தொடரும் வரை இலங்கை அரசோடு நேரடிப் பேச்சுக் கிடையவே கிடையாது என்று அடம்பிடித்து 'கௌரவம்' பார்த்தவர்கள் தமிழர்கள்.

அத்தகைய தமிழர்கள், புலிகளைத் தடை செய்த நாடுகளின் பிரதிநிதிகள் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடு நிலையாளர்களாக - நீதிபதி ஸ்தானத்தில் - அமர்ந்திருந்து கண் காணிப்பாளர்களாகச் செயற்படும் கௌரவத்தை (?) ஏற்றுக் கொள்வார்களா? கௌரவத்துடன் கூடிய தீர்வுக்காக உயிர், உடைமை, தலைமுறைகளைத் தியாகம் செய்து களச் சமராடும் ஓர் இனத்தோடு நீங்கள் விடயங்களைக் கையாள்கின்றீர்கள் என் பதை மறந்து விடாதீர்கள்.

நீங்கள் உங்கள் நாட்டின் பிரதிநிதிகளாகவோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பிலோ இந்தக் கண்காணிப்புப் பணியை ஆற்ற வில்லை என்றும் அதனால் அந்த அடிப்படையில் உங்களைக் கணிக்கவேண்டாம் என்ற சாரப்படவும் ஒரு வாதத்தை முன்வைக்கின்றீர்கள்.

முதலாவது - நீங்கள் ஒவ்வொருவரும் நோர்ட்டிக் நாடுகளைச் சேர்ந்த ஒரு தேசத்தவர் என்ற முறையில்தான் இப்பணிக்குத் தெரி வாகியுள்ளீர்கள் என்பதால் உங்கள் பொறுப்பில் உங்கள்தேசத் தின் நிலைப்பாடு புறக்கணிக்கத் தக்கதே அல்ல.

அடுத்தது - இதுவரை காலமும் உங்களுக்கு முன்னர் உங் களின் கண்காணிப்புக்குழுத் தலைவர் பதவியை வகித்து வந்த வர்கள் நோர்வே நாட்டவர்கள். அனுசரணைப் பணியையும் கண் காணிப்புக்குழுத் தலைவர் பொறுப்பையும் நோர்வே வகிக்கக் கூடாது என்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத் தியமையால்தான் அப்பதவி நோர்வே நாட்டவரிடம் இருந்து சுவீடன் நாட்டவராகிய உங்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று இலங்கை அரசே அறிவித்திருந்தது. ஆக, நோர்வே நாட்டைச் சாராத - சுவீடன் நாட்டைச் சார்ந்த - ஒருவர் என்ற முறையில்தான் உங்கள் பொறுப்பு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவேதான் உங்கள் பொறுப்பை உங்கள் நாட்டோடு பொருத்திப் பார்த்து முடிவுசெய்யும் நிலைமை தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

புலிகளைத் தடை செய்வதன் மூலம் இலங்கை விடயத்தில் நடுநிலைப் பணியாற்றும் தகுதியை உங்கள் நாடும் அதன் மூலம் நீங்களும் இழந்து விட்டீர்கள் என்ற தமிழரின் முடிவும், நிலைப் பாடும் நியாயமானதே. அதற்கு தமிழர்களை - புலிகளை - குற்றம் சுமத்துவதில் அர்த்தமில்லை.

# தேசியத் தலைவரை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது திணறுகின்றது சர்வதேசம்

## புலிகளின் மூத்த தளபதி கேணல் பால்ராஜ் சொல்கிறார்



தமிழீழத் தேசியத் தலைவரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியாத நிலையில் சர்வதேசம் திணறிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் பால்ராஜ்.

மல்லாவியில் நேற்றுமுன்தினம் சனிக் கிழமை நடைபெற்ற கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையின் ஆறாவது அணிக் கான பயிற்சி ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ள தாவது:-

தலைவர் அவர்களை விலைக்கு வாங்கவும் முடியாது, சதிவலைக்குள் வீழ்த் தவும் முடியாது. தமிழ் மக்களால் ஏற் றுக் கொள்ளமுடியாத ஒரு தீர்வுத்திட்ட தற்குள் அவரைக் கொண்டு வரவும் முடி யாது என்பதனை சர்வதேச சமூகம் நன றாக புரிந்துகொண்டுள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர் களைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியாத நிலையில் சர்வ தேசம் திணறிக் கொண்டிருக்கின்றது.

உண்மையான ஓர் இனத்தின் விடு தலைக்காக போராடுகின்ற அமைப்பு தான் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிர பாகரன் அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு என்பதனை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டுள்ளது.

தற்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசு ஒரு கொலைகார அரசு என்பது கண டறியப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டு மேற் கொள்ளப்பட்ட படுகொலைச சம்பவங் களைப் போன்று மீண்டும் 2006 ஆம் ஆண்டு தமிழர்கள் மீது படுகொலைச் செயற்பாடுகள் திணிக்கப்பட்டுள்ளன.


தற்போது இடம்பெறுகின்ற கொடு ரமான கொலைகளுக்கு தற்போதைய ஸ்ரீலங்கா அரச தலைவர் மகிந்த ராஜ பக்ஷவே பொறுப்பேற்க வேண்டும்.

தர்சினி படுகொலை, அல்லைப்பிட்டிப் படுகொலை ஆகியன முதல் கொண்டு மன்னார் படுகொலை வரையான கொலை கள் மிகக் கொடூரமாக மேற்கொள்ளப பட்டுள்ளன.

இதற்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷ விடம் இருந்து ஒரு புதிய செய்தியை இனியும் எதிர்பார்க்க முடியுமா?

முழுமையாக தமிழர்களை அழிப் பதற்காகவும் அதற்கான சதித் திட்டத் துடனும் ஸ்ரீலங்கா அரசின் செயற் பாடுகள் இடம்பெறுகின்றதே தவிர தீர வுத் திட்டத்தினை முன்வைத்து தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதில் அரச தரப்பினர் எவ ருக்கும் அக்கறை இல்லை.

இவ்வளவு காலப் போரின் போது ஸ்ரீலங்கா அரசிற்கும் அரச படைகளுக் கும் தக்க பாடம் புகட்டப்பட்டுள்ளது. போர் மூலம் வெற்றி பெறலாம் என்று மகிந்த ராஜபக்ஷ கனவு காண்கின்றார். நிச்சயமாக இது பகற்கனவாகவே அமை யும் - என்றார் கேணல் பால்ராஜ்.(352)



தமிழர்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்து பிரான்ஸில் கடந்த 20 நாள்களாக கவனயீர்ப்பு உண் ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.மேற்படி போராட்டத்தின் 20 ஆவது நாளை நினைவு கூரும் வகையில் கடந்த சனியன்று பிரான்ஸில் கலை நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அன்றைய தினம் தேசியத் தலைவரின் உருவப் படத்தை தாங்கியவாறு ஈழத் தமிழர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட் டிருப்பதை முதலாவது படத்திலும் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது குறித்த துண்டுப்பிரசுரங்களை பிரான் ஸின் வீதியொன்றில் பிற நாட்டவர்களிடம் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## கொக்குவில் வளர்மதியில் இன்று யோகாசனப்பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ்.சிவலிங்க யோக கேந்திர நிலை யம் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலைய ஆதர வுடன் நடத்தும் யோகா சனப் பயிற்சி வகுப்புகளின் ஆரம்ப நிகழ்வு இன்று நடைபெறுகிறது.

இன்று காலை 8.30மணிக்கு செய லாளர் எஸ்.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் அறிமுகவு ரையை யோகாசன போதனாசிரியர் வி.என். சிவனேசராசா நிகழ்த்துவார். தொடர்ந்து 'யோகமும் வாழ்வும்' என்ற பொருளில் யோக ஆச்சாரியார் யோகி ராஜன் கருத்துரை வழங்குவார்.

இருபாலாரும் பங்குபற்றும் இப் பயிற்சி வகுப்புகள் மூன்று மாத காலம் நடைபெற்ற பின்னர் பயிற்சியின் நிறை வில் 'சிவலிங்க யோக சான்றிதழ்' வழங் கப்படும்.

பயிற்சி நெறியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் வளர்மதி சனசமூக நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

### உதயவாக்கு

மனிதஞானம் முழுவதையும் இரண்டு சொற்களில் அடக்கிவிடலாம். நம்பிக் கையோடு காத்திரு என்பதாம் அது.

- *அலெக்சான்டர் டூமாஸ்.*

### நாளை

ஆனி - 27
செவ்வாய்க்கிழமை
11.07.2006
திதி :பூரணை
முற்பகல் 09.27
நட்சத்திரம் : பூராடம்
பிற்பகல்: 01.11
[illegible] : 10.29 - 11.59
ராகுகாலம்: 02.59 - 04.29

## வீடமைப்புத் திட்ட முறைப்பாடுகள் குறித்து தென்மராட்சியில் விசாரணை

தென்மராட்சி, ஜூலை10

தென்மராட்சிப் பிரதேசத்தில் உலக வங்கியின் உதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் குறித்து பிர தேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமை யிலான குழுவினரால் நேரில் சென்று விசாரணைகள் நடத்தப்பட்டு வரு கின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேசத்தின் 21 கிராமங்களில் மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பய னாளிகள் தொடர்பாக முறைப்பாடுகள் அந்தந்தப் பகுதி மக்களால் பிரதேச செயலருக்கு வழங்கப்பட்டன.

இந்த முறைப்பாடுகளை பிரதேச செயலர், உதவித் திட்டமிடல் பணிப் பாளர் மற்றும் பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் ஆகியோர் கிராம அலு வலர் பிரிவு ரீதியாகச் சென்று முறைப்பாட் டாளர் மற்றும் பயனாளிகளை நேரில் சந் தித்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## 'இசைச் செல்வர்' விருது வழங்கி இரு கலைஞர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை10

வவுனியா கலை இலக்கிய நண்பர் கள் வட்டம் நடத்தும் இலக்கிய வட் டத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் வைத்து இரு கலைஞர் களுக்கு 'இசைச் செல்வர்' விருது வழங் கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

மிருதங்க வித்துவான் இசை எழில் கந்தையா கனகேஸ்வரன், வயலின் கலை ஞர் கலாபூஷணம் திருமதி விமலலோஜினி கனகேஸ்வரன் ஆகிய இருவருமே கௌரவிப்புப் பெறுபவர்கள் ஆவர்.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகரசபை மண்ட பத்தில் தமிழ்மணி அகளங்கன் தலை மையில் இலக்கிய வட்டத்தின் ஒன்ப தாவது ஆண்டு விழா நடைபெறவுள் ளது.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தின ராக வவுனியா அரச அதிபர் சி.சண் முகமும் கௌரவ விருந்தினர்களாக யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரி யர் சு.இரா ஜதுரை, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி க.பேர்னாட் ஆகியோரும் கலந்து கொள் வர்.



இந் நிகழ் வில் மாருதம் சஞ்சிகை இதழ் 7, கவிஞர் பே.செபமாலை ஆசிரியர் எழுதிய 'குயிலும் மயிலும்' கவிதைத் தொகுதி ஆகியவற்றின் வெளியீடும் இடம் பெறும்.

கலைஞர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வில் கௌரவிப்பு உரையை யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கில முதுநிலை விரிவுரையாளர் கந்தையா ஸ்ரீகணேசன் நிகழ்த்துவார். பொன்னாடையைவவுனியா அரச அதிபர் அணிவிப்பார். விருதுகளை யாழ். பல் கலைக்கழக வவுனியா வளாக முதல் வர் பேராசிரியர் சு.இராஜதுரை வழங் கிக் கௌரவிப்பார். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பிரதேச சபையின் தலைமையகக் கட்டடப் பணிகள்

## விரைவில் ஆரம்பமாகும் எனத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை11

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய தலைமை அலுவலகம்அமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

- இவ்வாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (சுனாமி) க.இராசையா தெரிவித்தார்.

'நீர்ப்' நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிய தலைமை அலுவலகம் அமைக்க ரூபா 2கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டதும் -

அதற்கான கேள்வி அறிவித்தலும் யாழ். அரச அதிபரால் கோரப்பட்டு ஒப்பந்தகாரர் ஒருவரினால் வேலைத்திட்டம் பொறுப்பேற்கப்பட்டதும் தெரிந்ததே.

தற்போது புதிய அலுவலகம் அமைப்பதற்கான கடிதத் தொடர்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் -

இந்த மாத இறுதிக்குள் புதிய அலுவலகத்திற்கான அடிக்கல் நடப்படும் என்றும் - தெரியவருகிறது.

இதேவேளை- வேலணை பிரதேச சபைக்கு 'நீர்ப்' நிதிமூலம் ஒதுக்கப்பட்ட நிதி மூலம் இரண்டாம் கட்ட அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(185)


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 301186953 முதல் 301202255 வரை. சீட்டிழுப்பு இல. 1725 திகதி 08-07-2006

வெற்றி எண்கள் | சுப்பர் இல.

**26 30 43 48** | **01**

ஜக்பொட் பரிசு ரூ. **17,677,600/-** வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இல. + சுப்பர் இல. | 01 | 17,677,600/- | 17,677,600/- |
| 4 இல. | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 3 இல. + சுப்பர் இல. | 22 | 5,000/- | 110,000/- |
| 3 இல. | 418 | 1,000/- | 418,000/- |
| 2 இல. + சுப்பர் இல. | 1360 | 500/- | 680,000/- |
| 2 இல. | 19882 | 40/- | 795,280/- |
| 1 இல. + சுப்பர் இல. | 18888 | 20/- | 377,760/- |
| 1 இலக் | 282722 | 10/- | 2,827,220/- |
| மொத்தம் | | | |
| தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளின் பெறுமதி | 5 | 120,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 323,299 | | 24,485,860/- |

ரூ. 120,000 பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெற்ற 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 301196238-4-95 |
| அம்பாந்தோட்டை | 301189213-0-89 |
| மாத்தறை | 301190421-9-17 |
| கண்டி | 301195185-5-43 |
| காலி | 301199451-6-33 |

தொடர் இல. 201284298 க்கு மேற்பட்ட வதா நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 12 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 2,000,000/-**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

நீங்கள் ஒரு வெற்றியாளரா என்பதை பாருங்கள் !

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள் | வெற்றி இலக்கங்கள்

**03 09 15 41**

| | |
|---|---|
| சீட்டிழுப்பு இல. | 794 |
| திகதி | 07.07.2006 |
| டிக்கட்டின் வர்ணம் | சிவப்பு |
| செல்லுபடியாகும் தொடர் இல. | 5261608-5275716 |

ஜக்பொட் பரிசு **Rs.3,117,950/-** வெல்லப்பட்டுள்ளது

லக்னம் கடகம்

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 310976 | ரூ. 10 | ரூ. 3,109,760 |
| 2 இலக்கங்கள் | 28530 | ரூ. 20 | ரூ. 570,600 |
| 1 இல.+லக்னம் | 28401 | ரூ. 30 | ரூ. 852,030 |
| 2 இல.+லக்னம் | 2629 | ரூ. 100 | ரூ. 262,900 |
| 3 இலக்கங்கள் | 763 | ரூ. 500 | ரூ. 381,500 |
| 3 இல.+லக்னம் | 77 | ரூ. 5,000 | ரூ. 385,000 |
| 4 இலக்கங்கள் | 03 | ரூ. 100,000 | ரூ. 300,000 |
| 4 இல.+லக்னம் | 01 | ரூ. 3,117,950 | ரூ. 3,117,950 |
| மொத்தம் | | | ரூ. 8,979,740 |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | ரூ. 204,700 | ரூ. 1,023,500 |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 371385 | | ரூ. 10,003,240 |

இந்த செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசு

**ரூ. 1,000,000/-**

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றிபெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 5268091-9-71 |
| களுத்துறை | 5265690-2-36 |
| திருகோணமலை | 5266297-5-55 |
| மாத்தறை | 5263572-1-00 |
| காலி | 5266942-5-82 |

தொடர் இல. 4380158 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2006 ஜூலை 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 24 - 08 - 1916



இறப்பு 08 - 07 - 2006

### டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை

*(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், முன்னாள் உசன் தென்னிந்திய திருச்சபை ஊழியர்)*

எமது வரணி பகல் வேளை பாலர் பராமரிப்பு நிலையத் தலைமை ஆசிரியை திருமதி J.J.நவரட்ணம் (லலி ரீச்சர்) அவர்களின் பாசமிகு தந்தை **D.J.பொன்னுத்துரை** அவர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கைகளைச் செலுத்துவதோடு, அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு இறை ஆறுதல் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

(52071) (24-11-17)

*பகல் வேளை பாலர் பராமரிப்பு நிலையம், வரணி.*

மாணவர், பழையமாணவர், ஆசிரியர், ஊழியர், பெற்றோர்.

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 24 - 08 - 1916



அழைப்பு 08 - 07 - 2006

### டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை

*(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், முன்னாள் உசன் தென்னிந்திய திருச்சபை ஊழியர்)*

எமது வரணி தென்னிந்திய திருச்சபையின் அங்கத்தவரான **D.J.பொன்னுத்துரை** அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, இறையாறுதலுக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(52070) (24-11-17)

சபை மக்கள்
தென்னிந்திய திருச்சபை, வரணி.


## VACANCIES

கொழும்பிலுள்ள சுடர் ஒளி பத்திரிகை நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு GCE(O/L) பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| DRIVERS | - 2 வருட அனுபவம், வாகன லைசன்ஸ் A/C & D |
| DESPATCH CLERKS | - வாகன லைசன்ஸ் D |
| MARKETING EXECUTIVES | - ஆங்கிலத்தில் சரளமாக பேசக் கூடிய வல்லமை |
| PRINTING TRAINEES | - Printing துறையில் ஆர்வம் |

**தங்குமிட வசதி வழங்கப்படும்**

நற்சாட்சிப் பத்திரங்களுடன் வேலை நாட்களில் இம் மாதம் 13 ஆம் திகதிக்கு முன்னர் காலை 10.00 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும். அல்லது 13.07.06 க்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

(அ-50124)

**உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருணகிரிநாத சுவாமி விழா

யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் நடைபெறும் அருணகிரிநாதசுவாமி விழா இன்று திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு தொண்டைமானாறு சந்நியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சிறப்புரைகளை பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜசர்மா, சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் நிகழ்த்துவர். திருப்புகழிசையைப் புத்தூர் [illegible] லூரி மாணவிகள் நிகழ்த்துவர். (202)

# வலிகாமம் கல்வி வலயத்தில் இன்று கணித, விஞ்ஞானப் போட்டி

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான கணித, விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகள் தரம் 6,7,8 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 9 மணிக்கும் தரம் 9,10,11 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 10.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் உடுவில் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இராமநாதன் கல்லூரியிலும் சண்டிலிப்பாய் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் சங்கானைக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு வட்டு. இந்துக் கல்லூரியிலும் மேற்படி போட்டிகள் நடைபெறும்.

மேற்படி கோட்ட மட்டப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் கணிதத்திலும் விஞ்ஞானத்திலும் தனித்தனியாகப் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடம்பெறும் மாணவர் மட்டும் பங்குபற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (69)


**ராஜா கிறீம் ஹவுஸ்**





36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கிளை: 46, கஸ்தூரியார் வீதி, யாழ்.

தற்பொழுது எமது புதிய கிளை ஸ்தாபனத்தில் சுவையான கோழிப்புரியாணியும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**RAJAH CREAM HOUSE**
46, KASTHURIYAR ROAD, JAFFNA.

(52066) (24-11-17)


## மரண அறிவித்தல்

### டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், முன்னாள் உசன் தென்னிந்திய திருச்சபை ஊழியர்)



வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் ஜேம்ஸ் பொன்னுத்துரை அவர்கள் 08.07.2006 சனிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திருமதி மேரி அன்னரத்தினம் (இளைப்பாறிய தலைமைஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் ஜோர்ஜ் பாலேந்திரன் (**C.T.B.** முன்னாள் சாரதி, முல்லைத்தீவு, யாழ்.சாலை), காலஞ்சென்றவர்களான பமலா, இந்திராணி, லோறன்ஸ், வினிபிறற் விமலேந்திரநாதன் மற்றும் வண. றெஜினோல்ட் நவேந்திரனுகூலன்(முகாமைக்குரு, தென்னிந்தியத் திருச்சபை, கிளிநொச்சி), ஜயேந்திரலலிதா நவரட்ணம் (முதன்மை ஆசிரியை பகல்வேளை பாலர் பராமரிப்பு நிலையம், வரணி), றீட்டா இந்திரவதனா லோறன்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வநாயகி (பளை, அ.த.க.பாடசாலை), பாலராணி (கொழும்பு), லில்லி (கிளிநொச்சி), நவரட்ணம் (புதுக்குடியிருப்பு), வண.**E.N.**லோறன்ஸ் (சபைக்குரு, நகர்ப்பணி, தென்னிந்தியத் திருச்சபை, யாழ்ப்பாணம்)ஆகியோரின் அன்பு மாமனும் சுனிற்றா (வரணி), டெய்சி (கனடா), அனுசியா (பிரான்ஸ்), ஜூலியானா (கனடா), ஜெயனேசன் (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பலாலி), ஜெயசீலன் (**U.K.**), ஜெயக்குமார்(**U.K.**), ஜெயராஜ் (ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு), ஜெசி ஜெயபாலினி (கொழும்பு), கிறிஸ்டியானா (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு அவரின் இல்லத்தில் இன்று (10.07.2006) திங்கள் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வரணி தென்னிந்திய திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

"இந்திரா லொட்ஜ்"
வரணி. (52069) (24)

தகவல்:
குடும்பத்தினர்.


தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்

**இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கணினிப்பயிற்சி நிலையம்**

114, டச்சுவீதி, சாவகச்சேரி. | 114, Duch Road, Chavachacheri.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**CIRTIFICATE COURSE**

**Basic Computer Application**

Word
Excel
Access
Power point
Page Maker
Adobe PhotoShop
Corel Drow

பதிவுகளை எதிர்வரும் 14ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும்

யாழ் கலிவிப்பாளிஞ்சி நிலையம் புதிய இடத்தில் புதிய பிரிவுகளுடன்

காலம்: 3 - 6 மாதங்கள்

கிராமிய தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையம்
**RURAL IT TRAINING CENTRE**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 114, டச்சு வீதி, சாவகச்சேரி. | புகையிரத நிலைய வீதி, மன்னார். | 6/77, ஆரியபுர, பொகவந்தலாவை. | 19/1, ஆஸ்பத்திரி வீதி, கம்பளை. | RDS Building, பாலையூற்று, திருகோணமலை. |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## ஜேர்மனிக்கு மூன்றாம் இடம் ஆறுதலுடன் விடைபெற்றது



மூன்றாம் இடத்தைப் பெற்ற ஜேர்மன் அணி

ஸ்ரட்கார்ட்,ஜூலை 10

உலகக்கிண்ணக் கால்பந்துத் தொடரில் ஜேர்மனி மூன்றாம் இடம் பெற்று ஆறுதல் தேடியது. பாஸ்டியன் ஸ்கிவின்ஸ்டீகர் அசத்தலாக ஆட ஜேர்மனி அணி, போர்த்துக்கலை 3-1 என்ற கோல் கணக்கில் சுலபமாக வீழ்த்தியது. 'சேம் சைட் கோல்' அடித்து வெறுப்பேற்றிய போர்த்துக்கல் அணி நான்காம் இடத்துடன் நாடு திரும்புகிறது.

ஸ்ரட்கார்ட்டில் நேற்றுமுன்தினம் நடந்த மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஜேர்மனி, போர்த்துக்கல் அணிகள் மோதின. சொந்த மண்ணில் கிண்ணக் கனவு தகர்ந்த நிலையில், ஜேர்மனி மூன்றாம் இடம் பெற்று ஆறுதல் தேடக் களமிறங்கியது.அணித்தலைவர் மைக்கேல் பாலக் காயம் காரணமாக இடம்பெறவில்லை. இவருக்குப் பதிலாக அனுபவக் கோல்காப்பாளர் ஒலிவர் கான் தலைமைப் பொறுப்பை ஏற்றார். இம்முறை முதல் வாய்ப்புப் பெற்ற ஒலிவர், ஜேர்மனிக்காக தனது 86ஆவது ஆட்டத்தில் பங்கேற்றார். இத்தொடருடன் ஓய்வு பெற உள்ள போர்த்துக்கல் அணித்தலைவர் பிகோ ஆரம்பத்தில் களமிறங்கவில்லை.

விசில் ஊதிய முதல் நிமிடத்தில் இருந்து ஜேர்மனியின் தாக்குதல் ஆரம்பமானது. 5ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு மூலை உதை வாய்ப்புக் கிடைத்தது. இம்முறை மெட்சல்டர் அடித்த பந்து, பெனால்டி பகுதியில் வைத்து போர்த்துக்கலின் நுனா வாலன்டி கையில் பட்டுச் சென்றது. உடனே ஜேர்மனி வீரர்கள் பெனால்டி கோரினர். ஆனால், நடுவர் டோரு காமிக்காவா மறுத்து விட்டார். 14ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் பாலேட்டா பந்தை மின்னல் வேகத்தில் எடுத்துச் சென்றார். காத்திருந்த ஒலிவர் கான் துடிப்பாகத் தடுத்து விட, நல்ல வாய்ப்பு நழுவியது. 25ஆவது நிமிடத்தில் பொடோல்ஸ்கி தடையற்ற உதை வாய்ப்பில் அடித்த பந்தை, போர்த்துக்கலின் நட்சத்திரக் கோல் காப்பாளர் ரிக்கார்டோ அழகாகத் தடுத்தார். இம்முறை அதிக கோல் அடித்த ஜேர்மனியின் குளோஸால் பெரிதாகச் சாதிக்க முடியவில்லை. இரு அணிகளின் கோல் காப்பாளர்கள் மட்டும் ஜொலிக்க, மந்தமான முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் முடிந்தது.

இரண்டாவது பாதியில் ஜேர்மனி கோல் மழை பொழிந்தது. பிகோ இல்லாத நிலையில் போர்த்துக்கல் வீரர்களிடம் போதிய துடிப்பைக் காண இயலவில்லை. ஆட்டத்தின் 56ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் பாஸ்டியன் ஸ்கிவின்ஸ்டீகர், போர்த்துக்கலின் வீரர்களை மடக்கி, கோல்காப்பாளர் ரிக்கார்டோ தலைக்கு மேலாக அற்புத கோல் அடிக்க ஜேர்மனி 1-0 என்ற முன்னிலை பெற்றது. அடுத்து 61ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலுக்கு இன்னொரு இடி விழுந்தது. இம்முறை தடையற்ற உதை வாய்ப்பில் பாஸ்டியன் உதைக்க, அதை தடுக்க முற்பட்ட போர்த்துக்கலின் அர்மாண்டோ பெடிட் அப்படியே கோல் கம்பத்திற்குள் பந்தை தள்ளி விட, 'சேம் சைட் கோல்' விழுந்தது. பெடிட் தயவில் ஜேர்மனி 2-0 என்ற நிலையில் முன்னிலை பெற்றது. ஆட்டத்தின் 78ஆவது நிமிடத்தில் பாஸ்டியன் மீண்டும் தாக்குதல் நடத்தினார். போர்த்துக்கல் வீரர்களை அழகாகச் சமாளித்த இவர் 25 மீற்றர் தூரத்தில் இருந்து இன்னொரு சூப்பர் கோல் அடிக்க, ஜேர்மனி 3-0 என்ற கோல் கணக்கில் அசைக்க முடியாத முன்னிலை பெற்றது.


ஆட்டத்தின் 77ஆவது நிமிடத்தில் பிகோ ஆடுகளம் புகுந்தார். இவர் வந்ததும் போர்த்துக்கல் ஆட்டத்தில் துடிப்புக் காணப்பட்டது. 88ஆவது நிமிடத்தில் பிகோ பந்தை 'கிராஸ்' செய்ய, அதை அப்படியே தலையால் முட்டி நுனோ கோமஸ் கோல் அடிக்க, போர்த்துக்கல் ஒரு கோல் அடித்து ஆறுதல் தேடியது. இறுதியில் ஜேர்மனி அணி போர்த்துக்கலை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மூன்றாம் இடத்தை அசத்தலாகப் பெற்றது.

## ரஷ்யாவில் கோர விமான விபத்து 150 பேர் பலி; 50 பேர் படுகாயம்

மொஸ்கோ,ஜூலை10

ரஷ்ய பயணிகள் விமானம் ஒன்று விபத்திற்குள்ளானதில் அதில் பயணம் செய்த 150இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். சுமார் 50 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலிருந்து இர்குட்ஸ்க் நகருக்கு சென்ற இந்த விமானம் சைபீரியா விமான நிலையத்தில் இறங்கும் போது, விமானம் நிலை தடுமாறி அருகில் இருந்த கட்டடத்தில் மோதி விபத்திற்குள்ளானது. விமானத்தில் 192 பயணிகளும் 8 விமான ஊழியர்களும் இருந்தனர். இவர்களில் 150 பேர் இறந்து விட்டதாகவும் 42 பேர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளாகவும் முதலில் வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன. விமானத்தில் இருந்தவர்களில் பெரும் பாலானோர் குழந்தைகள். அவர்கள் விடுமுறைக்காக பைக்கால் ஏரிக்குச் சென்ற போது இந்த கோர விபத்து நடைபெற்றது. விமானம் விபத்திற்குள்ளான பகுதியில் ஏற்பட்ட தீ 3 மணி நேரம் கழித்து அணைக்கப்பட்டது. ரஷ்ய அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர். ரஷ்யாவில் கடந்த 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற விமான விபத்தில் 145 பேர் பலியாயினர். 2004ஆம் ஆண்டு மொஸ்கோவில் 2 விமானங்கள் மோதிக்கொண்டதில் 89 பேர் இறந்தனர். இந்த ஆண்டு கருங்கடலில் ஏற்பட்ட மற்றொரு விமான விபத்தில் 113 பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது. (202)

விபத்துக்குள்ளான விமானம்.




## உலகத்தில் இந்தியா 12 ஆவது பணக்கார நாடு

உலகளாவிய ரீதியில் 12ஆவது பணக்கார நாடு என இந்தியாவை உலக வங்கி அறிவித்துள்ளது.

உலக அளவிலான 15 பணக்கார நாடுகளை உலக வங்கி அறிவித்துள்ளது. அதன்படி அமெரிக்கா முதல் இடத்தையும் ஜப்பான் இரண்டாவது இடத்தையும் ஜேர்மனி மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.

பிரிட்டன் ,பிரான்ஸ் மற்றும் இத்தாலி முறையே 5,6,7 ஆவது இடங்களையும் ஸ்பெயின், கனடா, பிரேசில் மற்றும் தென் கொரியா ஆகியவை முறையே 8, 9, 10 மற்றும் 11 ஆவது இடங்களையும் பிடித்துள்ளன.

அதற்கு அடுத்தாற் போல் இந்தியா 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. முதல் 15 இடங்களில் ஆபிரிக்க நாடுகள் எந்த இடத்தையும் பிடிக்கவில்லை. தெற்கு ஆசிய நாடுகளில் 15 இடங்களில் இந்தியா மட்டுமே இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டிஸ்கவரியின் பயணத் திட்டத்தை மேலும் ஒரு நாள் நீடிக்கிறது நாசா

வாஷிங்ரன், ஜூலை10

டிஸ்கவரி விண்வெளி ஓடத்தின் பயணத் திட்டத்தை மேலும் ஒரு நாள் நீடித்துள்ளது அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா.

டிஸ்கவரியில் சென்ற விண்வெளி வீரர்கள், ஓடத்தின் மேற்புறம் அமைந்துள்ள வெப்பம் தாங்கும் ஓடுகளில் ஏதேனும் சேதம் ஏற்பட்டுள்ளதா என அறிய விண்வெளியில் நடந்து ஆய்வு நடத்துவர்.

இதன் மூலம் ஓடத்தின் மூக்குப் பகுதியில் காணப்படும் சந்தேகத்துக்கு இடமான அடையாளங்கள் என்னவென்று கண்டறியப்படும். இவை பறவைகள் இட்ட எச்சங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அது மட்டுமன்றி வெப்பம் தாங்கும் மேற்புற ஓடுகளுக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என உறுதிப்படுத்த நாசா விரும்புகிறது. 2003 ஆண்டு கொலம்பியா விண்வெளி ஓடம் பூமிக்குத் திரும்புகையில் மேற்புற ஓடுகளில் ஏற்பட்டிருந்த சேதம் காரணமாக அது தீப்பிடித்து வெடித்துச் சிதறியது தெரிந்ததே. கல்பனா சாவ்லா உள்ளிட்ட விண்வெளி வீரர்களை பலிகொண்ட விபத்து இது.

12 நாள் விண்வெளிப் பயணமாக டிஸ்கவரி ஓடம் கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் சென்றது. புவிப் பரப்பில் இருந்து 400 கிலோமீற்றர் உயரத்தில் விண்ணில் அமைந்துள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்துடன் வெற்றிகரமாக இணைந்தது டிஸ்கவரி.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை நிலையத்துடன் இணைந்திருக்கும் டிஸ்கவரி பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 17ஆம் திகதி அமெரிக்காவின் புளோரிடா மாநிலம் கேப் கனவரேல் ஏவுதளத்தை வந்தடையும்.

மேற்புற ஓடுகளில் குறைந்த அளவே சேதம் ஏற்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. டிஸ்கவரி புறப்பட்டு சென்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இருந்து இது தெரிய வந்துள்ளது என இயக்குநர் டோனி செக்காச்சி ஹூஸ்டன் நகரில் கூறியுள்ளார். (202)

## வணக்கஸ்தலம் மீது குண்டுவீச்சு: 5பேர் பலி; 46 பேர் காயமுற்றனர்

ஸ்ரீநகர்,ஜூலை10

இந்திய ஆட்சிக்குட்பட்ட காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகள் வீசிய கைக்குண்டுத் தாக்குதலில் ஓர் அரசியல்வாதி உட்பட ஐந்து பேர் பலியானார்கள்; மேலும் 46 பேர் காயமடைந்தார்கள்.

ஸ்ரீநகருக்கு 37 மைல் தெற்கிலுள்ள குல்காம் என்ற ஊரில் வணக்கஸ்தலம் ஒன்றில் கூடியிருந்த பக்தர்கள் கூட்டமொன்றை நோக்கி தீவிரவாதிகள் இந்தக் கைக்குண்டு தாக்குதலை நடந்திருக்கிறார்கள்.

வணக்கஸ்தலத்தை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்த முன்னாள் மாநில உதவி அமைச்சர் சாக்கினா இட்டு என்பவர் காயமுற்றுள்ளார். தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

காஷ்மீரின் பிரதான எதிர்க்கட்சியான தேசிய மாநாட்டுக் கட்சியின் மாநில சட்ட சபை உறுப்பினர்கள் குலாம் நபி தர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




திரு திருமதி தசிராகன் - சுமிதா
தம்பதியரின்
**செல்வப் புதல்வி த.மதுஷா**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (10.07.2006) திங்கட்கிழமை பளையிலுள்ள தனது அம்மப்பாவின் இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். மதுஷாவை அப்பா, அம்மா, பளையிலுள்ள அம்மப்பா துன்னாலையிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மச்சான் பளையிலுள்ள பெரியம்மா குடும்பம், விசுவமடுவிலுள்ள பெரியம்மா குடும்பம் மற்றும் அண்ணாமார், துன்னாலையிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, மாமாமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மதுஷாக் குட்டியை கலிகை முருகன் அருளினால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*நிரந்தர முகவரி:* துன்னாலை தெற்கு, கரவெட்டி.
*தற்காலிக முகவரி:* வண்ணாங்கேணி, பளை.

(சி.50129)
(39.11.14)

தகவல்: ராகவன் (அப்பா).

---

# எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்
## கந்தன் அருமைத்துரை



மண்ணில் 19.10.1944
விண்ணில் 10.06.2006

அன்பின் திருவுருவே! ஆருயிரே எங்கள் அப்பா!
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் பாசமுகம் தெரிகிறது
கேட்கும் குரலெல்லாம் உங்கள் குரல் போல் ஒலிக்கிறது
பூக்கும் மலர்கள் எல்லாம் உங்கள் முகம் தெரிகிறது
நீங்கள் பார்க்கும் பார்வையெல்லாம் பாச மழை பொழிகிறது
நீங்கள் பேசும் மொழிகள் எல்லாம் இனிமையாகக் கேட்கிறது அப்பா!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*இன்று (10.07.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.*

மூளாய் தெற்கு,
மூளாய்.

(52010)
(39.11.14.26)

தகவல்:
**குடும்பத்தினர்.**

---


# ADMISSIONS OPEN

**A/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே ! அடுத்து என்ன ?

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர்கல்வி
- வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்விக்கான வாய்ப்பு
- உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையில் கௌரவமான வேலைவாய்ப்பு
- சொந்த மண்ணில் பெற்றோரின் அரவணைப்பில் உயர் கல்வி

பெற்றோர்களே !!
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த ஓர் எதிர்காலத்திற்கான முதலீடு HND

பதிவுகளுக்கு நீங்கள் முந்திக்கொள்ளுங்கள்

BTEC HND
World Class Qualifications
*Delivered Locally...... Recognised Globally*

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

# IIS CITY CAMPUS

# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk


---

மிதிவெடி அபாயக் கல்வித்திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான

# பதவி வெற்றிடம்

சர்வோதய நிறுவனம் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் மேற்படி திட்டத்திற்கான வெளிக்கள உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்குக் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
3. சிறந்த ஆரோக்கியமும் நன்நடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.
5. முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


விண்ணப்பங்கள் யாவும் 13.06.2006 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்வரும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**மாவட்ட இணைப்பாளர்,**
சர்வோதய மாவட்ட நிலையம், 3, பிளச்சஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

SARVODAYA JAFFNA (ச.50136) (39.11.14.26) unicef

---

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



## றொபின்சன் சறத்

திதி: திருதியை (10.07.2006)

மண்ணில் 15.05.1970
விண்ணில் 21.06.2005

வாழ்விற்கு விசையாகி
இசைவோடு திசைகாட்டி
உறவிற்கு உரமாகி
உலகத்தில் எமைக்காத்தீர்
நமை விட்டு நீர் இன்று
நெடுந்தூரம் சென்றாலும்
நிலைபேறு நீர் காண
இறைபாதம் பணிகின்றோம்.

துர்க்காபுரம், மல்லாகம்.
**மனைவி, பிள்ளைகள்.**
(ச.50116) (39.14.11.26)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 . 03 . 1954
மறைவு 22. 06 . 2005

## திருமதி பூபதி துரைராசா

நீங்கள் எமைவிட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தாலும்
உங்கள் பிரிவின் துயரத்தை ஆற்ற முடியவில்லை
உங்கள் சிரித்த முகம் எங்கள்
கண்முன்னே நிழலாடிக் கொண்டே உள்ளது
எங்களை உயிரினும் மேலாக நேசித்த உங்கள் நினைவு
நாம் இம் மண்ணுலகில் வாழ்ந்திடும் காலம் வரை
எம் மனதில் நிறைந்திருக்கும்.

(52042)
(39.11.14.26)

22.06.2005 அன்று நயினாதீவு ஆலயத் தீர்த்த உற்சவ தினத்தில் சிவபதம் அடைந்த எமது அன்னையின் ஓராமாண்டு நினைவுடன் ஆண்டுத் திதி இன்று [10.07.2006] திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

*மகன்மார்:*
**ஞானசேகரன், குலசேகரன்.**

---

# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 03 . 1944
மறைவு 28 . 06 . 1999

## செல்வி பரமேஸ்வரி செல்லத்துரை

திதி: பூரணை 10.07.2006

அன்பின் திருவுருவாய் அணையா ஒளி விளக்காய்
விஞ்சும் பெருநிலவாய் வழிகாட்டிய- தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயர்
நீண்டிடும் எம் வாழ்வில் நிறைவினைத் தந்திடும்.

*உங்கள் ஆத்மா சாந்தி பெறத் தென்கோவை வீரபத்திரரைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் நினைவுடன்:
"தாயகம்",
கோப்பாய் தெற்கு, கோப்பாய்
-குடும்பத்தினர்.
(51965) (39.11.14.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலை. விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை10

யாழ். பல்கலைக்கழகத்தின் 2005/2006 கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்ட மாண வர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக்கு மான கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கலை (இராமநாதன் நுண்கலைக்கழகம் உட்பட), விவசாயம், மருத்துவம், முகா மைத்துவக் கற்கைகளும் வர்த்தகமும் ஆகிய பீடங்களின் புகுமுக மாணவர்களுக்கும் விவசாய பீட சிரேஷ்ட மாணவர்களுக்கு மான கற்கைநெறிகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

துணை மருத்துவ புகுமுக மாணவர்களுக் கான கற்கைநெறியும் மருத்துவபீட சிரேஷ்ட மாணவர்களுக்கான கற்கைநெறியும் அடுத்த மாதம் 7ஆம் திகதியும் விஞ்ஞானபீட புகுமுக மாணவர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர் களுக்கான கற்கைநெறிகள் எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் 11 ஆம் திகதியும் ஆரம்ப மாகவுள்ளன.

கலை, முகாமைத்துவ கற்கைகளும் வர்த் தகமும் ஆகிய பீடங்களின் சிரேஷ்ட மாண வர்களுக்கான கற்கைநெறிகள் எதிர் வரும் 24ஆம் திகதியும், சித்த மருத்துவப் பிரிவு புகுமுக மாணவர்களுக்கான கற்கை நெறி கள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதியும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பி.ஜி. டி.ஈ. (வவுனியா), குடித்தொகை அபிவிருத்தி ஆகிய கற்கைநெறிகளின் புகுமுக மாணவர் களுக்கான கற்கைநெறிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இப்பீடத்தின் ஏனைய கற்கைகளின் சிரேஷ்ட மாணவர்களுக்கான கற்கைநெறி கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீள ஆரம்பிக்கப்பட்டன.

சித்த மருத்துவப் பிரிவின் சிரேஷ்ட மாண வர்களுக்கான கற்கைநெறிகள் ஆரம்பிக்கும் திகதி குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் -

மேலதிக விவரங்களை அவ்வப்பீட விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம் என்றும் - பல்கலைக்கழகப் பதிவாளர் தெரி வித்துள்ளார். (202)

# விதைநெல்லைப் பெறுவதில் விவசாயிகளுக்கு ஆர்வமில்லை

## கமநல சேவை நிலையம் தெரிவிக்கின்றது

வலி.தென்மேற்கு ஜூலை10

விதைநெல்லை பெற்றுக்கொள்ள விவ சாயிகள் ஆர்வம் காட்டாததால் தேவை யானவர்களுக்கு விதைநெல்லைப் பெற்றுக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கம நல சேவை வட்டாரங்கள் தெரிவித்தன.

நெல்விதைப்பில் ஈடுபடவுள்ள விவசாயி கள் தமக்குத் தேவைப்படும் விதைநெல் பற் றிய விவரங்களைத் தத்தமது பிரிவு விவ சாயிகள் சம்மேளனங்களூடாக கமநல சேவை நிலையங்களிடம் புசல் ஒன்றுக்கு 300 ரூபா முற்பணம் செலுத்திப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தனர்.

கீரிமலை மற்றும் தொல்புரம் கமநல சேவை நிலையப் பிரிவுகளில் விதை நெல் பெறுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட வில்லை எனவும் - இதனால் ஏனைய விவ சாயிகளுக்கு விதைநெல் பெற்றுக்கொடுக்க தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப் படுகிறது. (204-135)

# சந்நிதியான் ஆச்சிரம ஏற்பாட்டில் மாணவரிடையே பேச்சுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை10

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சி ரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, மயில்வாகனம் சுவாமிகளின் 21ஆவது குரு பூசையை முன்னிட்டு பாடசாலை மாணவர் களிடையே பேச்சுப் போட்டிகளை நடத்த வுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டி எதிர்வரும் 30ஆம் திகதி நடை பெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தாம் கல்வி கற்கும் தரம், வயது என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப் பங்களை பாடசாலை அதிபர் அல்லது பெற் றோரால் உறுதிப்படுத்தி எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக 'சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டியில் வெற்றிபெறும் மாணவர்க ளுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி நடை பெறும் மயில்வாகன சுவாமிகளின் குரு பூசைத்தின நிகழ்வில் வைத்து பரிசில்கள் வழங்கப்படும். (202)

# வடமராட்சி கல்வி வலயத்துக்கான கட்டடப்பணிகள் பூர்த்தியடையாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை10

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத் துக்கென நிர்மாணிக்கப்படும் கட்டடங்களின் வேலைகள் இன்னும் பூர்த்தியாக்கப்பட வில்லை. இதனால் தொடர்ந்தும் வாடகைக் கட்டடத்திலேயே வலய அலுவலகம் இயங்கி வருகிறது.

வலயக்கல்வி அலுவலகத்திற்கு நிரந் தரக் கட்டடம் அமைப்பதற்குப் பொதுமக் களால் ஏழு பரப்புக் காணி பருத்தித்துறை ஓராம்கட்டைப் பகுதியில் கொள்வனவு செய் யப்பட்டிருந்தது.

இக்காணியில் இருமாடிக் கட்டடம் அமைப்பதற்கு அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் கட்டடம் நிர்மாணிக்கப் பட்டு இன்னும் வேலைகள் பூர்த்தியடை யாத நிலையில் காணப்படுகிறது.

இக்கட்டட வேலை உட்பட அனைத்து வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கல்விச் சமூகத் தால் அரசிற்கு மகஜர்கள் அனுப்பப்பட்டன. இது வரை நிதி ஒதுக்கப்படாததால் இக்கட்டடம் முழுமைபெறாத நிலையில் காணப்படுகிறது.

இக்கட்டடம் அமைந்துள்ள காணி போதிய வேலி வசதிகளின்றி திறந்த வெளி யாகக் காணப்படுகிறது.

அமைக்கப்பட்ட கட்டடம் மற்றும் காணி யின் பாதுகாப்புக்கருதி தற்போது கட்டடத் தின் ஒரு பகுதியில் பருத்தித்துறைக் கோட் டக் கல்வி அலுவலகம் இயங்கி வருகிறது. (117)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

# இன்றைய நிகழ்வுகள்

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசா லையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடை பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தி.அருட்பிரகாச பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ் வரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வல யப் பொறியியலாளர் கு.சிவபாலன், 'நிகொட்' திட்ட மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.நவரட்ணராஜா, சண்டிலிப் பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தன பாலசிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ள வுள்ளனர்.

இப்புதிய கட்டடம் நிகொட் நிதியுதவியு டன் 'கார்ப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (202-190)

* * *

கோப்பாய்,ஜூலை10

கோப்பாய் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலை யக் 'குரு பூர்ணிமா விழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள் ளது. நிகழ்வில் விசேட கூட்டுப்பிரார்த் தனை, சொற்பொழிவுகள் என்பன இடம் பெறவுள்ளன. (203-72)

# சுயதொழில் மேற்கொள்வதற்கு பயனாளிகளுக்கு உபகரணங்கள்

## முல்லை. தொழில்நுட்பக் கல்லூரி வழங்கியது

முல்லைத்தீவு,ஜூலை10

முல்லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரி யில் முதலாம் கட்டப் பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த பயனாளிகளுக்கு சுயதொழில் மேற்கொள்வதற்கென 'ஹூஸ்' நிறுவன நிதி யுதவியுடன் உபகரணங்கள் வழங்கப்பட் டுள்ளன.

தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றவர்களுக்குத் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் முகமாகச் சுயதொழில் மேற்கொள்வதற்கென இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொருண்மிய மதியுரையகத்தின் அனுசர ணையுடன் பங்குத்தந்தை யேம்ஸ் பத்தி நாதன் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை பொருண் மிய மதியுரையகப் பணிப் பாளர் சுந்தரமூர்த்தி ஏற்றி வைத்தார்.

இந்நிகழ்வில் பொருண்மிய மதியுரை யகப் பணிப்பாளர், ரி.ஆர்.ரெக் வெளிக்களப் பயிற்சி உத்தியோகத்தர் யசோதரன், முல் லைத்தீவு தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் சசிக்குமார் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில் மரவேலைப் பயிற்சிகளை மேற்கொண்ட 19 பேருக்கும், மேசன் வேலைப் பயிற்சிகளை மேற்கொண்ட 18 பேருக்கும், மின்னொட்டுப் பயிற்சிகளை மேற்கொண்ட 20 பேருக்கும், நீர்க்குழாய் பொருத்தல் பயிற்சிகளை மேற்கொண்ட 22 பேருக்கும் சுயதொழில் மேற்கொள்வதற் கென உபகரணங்கள் வழங்கப்பட்டன.(203)

**கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்**

# 'சாரளம் வழியே ஓவியன் விரல்கள்' கண்காட்சியும் நூல் வெளியீடும்

கிளிநொச்சி,ஜூலை10

இளம் ஓவியர் விஜிதனின் 'சாரளம் வழியே ஓவியன் விரல்கள்' என்னும் ஓவி யக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வும் நூல் வெளியீட்டு விழாவும் கடந்த வியாழக் கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றன.

நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில் ஓவியக் காண்காட்சி நடைபெற்று வருகின்றது.

தமிழீழ நுண்கலைக் கல்லூரியின் ஒழுங்குபடுத்தலில் ஓவியக்கண்காட்சி நடை பெற்று வருகின்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை ஓவிய ஆசிரி யர் ஜோசப் அன்ரனி ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஓவியக்கண்காட்சி மண்ட பத்தை அரசியல்துறைத் துணைப்பொறுப் பாளர் நாடாவெட்டித் திறந்துவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

அதனையடுத்து இளம் ஓவியர் விஜி தனின் ஓவியங்கள் உள்ளடக்கப்பட்ட நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

ஓவியர் ஆ.இராசையா நூலை வெளி யிட்டு வைக்க அதன் முதற்பிரதியை அர சியல்துறைப் துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் பெற்றுக் கொண்டார்.

கே.சி.கலைக்கதிர் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் மூத்த ஓவியர் ரமணி வாழ்த்துரையாற்றும்போது:-

ஓவியத்துறையில் வளரும் இளந்தலை முறையினர் தமது ஓவியங்களைக் காட்சிப் படுத்தித் தம்மை முதலில் அறிமுகம் செய்ய வேண்டும். அதுதான் அவர்களுக்கு வளர்ச் சியைத்தரும்.

எந்தவகையான ஓவியங்கள் என்றாலும் காட்சிப்படுத்தல் என்பது ஓவியத்துறையில் முக்கிய விடயம். விஜிதனின் இந்த முதல் ஓவியக் காட்சி அவரின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும் - என்றார்.

நிகழ்வில் உரையாற்றிய மூத்த ஓவியர் ஆ.இராசையா:-

நமது தமிழ் மக்கள் தமது கலைகளின் வெளிப்பாட்டை இத்தகைய காட்சிகளின் வழியாகவே வெளிக்கொண்டு வரவேண்டும் - என்றார்.

இதனையடுத்து தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி நிர்வாகி ராதேயன் நூல் மதிப்புரை யாற்றினார். (203)

## மாணவர் சேனைப் படைப்பயிற்சி

பரந்தன்,ஜூலை10

புலோப்பளை றோ.க.த. பாடசாலை மாணவர்களுக்கான மாணவர் சேனைப் படைக் கட்டுமானப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு ஆசிரியர் சீராளன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் தேசியக் கொடியை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் போராளி வதனி ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வில் சர்வதேச தமிழீழ மாண வர் பேரவை நிர்வாகப் பொறுப்பாளர் ஆதித் தன் கருத்துரை வழங்கியதைத் தொடர்ந்து மாணவர்களுக்கான பயிற்சியினையும் ஆரம்பித்துவைத்தார். (203-352)



'சாரளம் வழியே ஓவியன் விரல்கள்' ஓவியக்கண்காட்சி மற்றும் நூல் வெளியீட்டு நிகழ் வின் போது எடுக்கப்பட்ட படங்கள். ஓவியக் கண்காட்சி மண்டபத்தை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவெட்டி திறந்துவைப்பதையும் ஓவியர் ஆசை இராசையா நூலை வெளியிட்டு வைக்க, அதன் முதற் பிரதியை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் பெற் றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் விஜிதன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# கட்டட வேலைகள் ஆமைவேகம்; ஆசிரியர்கள், மாணவர் சிரமம்

## வலைப்பாடு றோ.க.த.கவின் நிலைமை

பரந்தன்,ஜூலை10

வலைப்பாடு றோ.க.த.க. பாடசாலைக் கென அமைக்கப்பட்டுவரும் புதிய கட்டடத் திற்கான வேலைகள் இதுவரை முழுமை யாகப் பூர்த்திசெய்யப்படாது உள்ளதால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்தப் பாடசாலை தற்போது வேரவில் பிரதேசத்தில் இயங்கி வருகின்றது.

தரம் ஒன்று தொடக்கம் ஒன்பதுவரை யான வகுப்புகளில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கற்று வருகின்றனர்.

இப்பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்காக 2005 பெப்ரவரி மாதம் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

ஆறுமாதகாலத்தில் இக்கட்டட வேலை கள் பூர்த்திசெய்யப்படும் எனத் தெரிவிக்கப் பட்டபோதும் இதுவரை அரைவாசி வேலைத் திட்டங்கள் கூட முடிக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலை தற்காலிகமாக ஒரு கொட்டகையிலேயே இயங்கி வருகிறது.

மலசலகூட வசதிகள் போன்ற அடிப் படை வசதிகள் எதுவுமற்றநிலையில்தான் இது இயங்கிவருகிறது.

இவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஏற்படுத் திக் கொடுத்துள்ளனர். பாடசாலை மாணவர் களின் நலனைக் கருத்திற்கொண்டு உரியவர் கள் பாடசாலைக் கட்டட வேலைகளை விரைவில் பூர்த்திசெய்து தரவேண்டும் என்று பாடசாலைச் சமூகம் கேட்டுள்ளது. (203-352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் தொடர்பாக ஆக்கங்கள் கோரப்படுகின்றன

கைதடி,ஜூலை10

கொழும்பிலுள்ள வயது வந்தவர்களுக்கான தேசிய செயலகம் 'முதியோர் 2006' என்ற தலைப்பில் வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

இதற்காக பொதுமக்களிடம் இருந்து கட்டுரை, கவிதை ஆகிய ஆக்கங்களை எதிர்பார்க்கின்றது. முதியோர் தொடர்பான நலனோம்பல், பண்பாடு ஆகியவற்றை உள்ளடக்கி 500 சொற்களில் அமையக்கூடியதாக கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

மேற்படி கட்டுரைகள், கவிதைகளை வரைவோர் இம்மாத இறுதிக்குள் ஆக்கங்களை தத்தமது பிரதேச செயலக சமூகசேவைப் பிரிவுக்கு அனுப்பிவைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (75)

## முக்கிய அறிவித்தல்

**UDUVIL GIRL'S COLLEGE**

ADVANCED LEVEL STUDENTS - 2005 BATCH

**Diploma in ICT**

மேற்படி கணனி வகுப்புகள் பாடசாலையில் ஜூலை 11, 2006 ஆரம்பமாகும். காலை 9 மணிக்கு மாணவர்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்கவும். மேற்படி வகுப்புகளில் ஏனைய பழைய மாணவிகள் சேர விரும்பினால், பாடசாலைக் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

(சி/50111)(26.15.45) - அதிபர்.




## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

**10.07.2006**

கும்பழாவளை, அளவெட்டியைச் சேர்ந்த **குமாரதாஸ் சர்மா - வத்சலாதேவி** தம்பதியரின் செல்வப் புதல்வன் **விஷ்வசுந்தர்** தனது முதலாவது பிறந்தநாளை இன்று [10.07.2006] திங்கட்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, பூட்டன், பூட்டி, அம்மப்பா, அப்பம்மா, தாத்தாமார், பாட்டிமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வனை சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ கும்பழாவளையான் துணை கொண்டு வாழ்த்துகிறார்கள்.

தகவல்: **குடும்பத்தினர்.**
கும்பழாவளை,
அளவெட்டி.
(52044) (24-17-14)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாத நோய்கள், வலிப்புநோய், பீனிசம்,தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், மூலவியாதிகள்,மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

**சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.**

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 2459
(51988) (18-24-17-14)


## எண்ணெய்க்காப்பு

சிறுப்பிட்டி தெற்கு காளி கோயிலில் நாளை [11.07.2006] செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவம் நடைபெறும்.

(52032) (18- 24-17-14) - பரிபாலன சபை.


உ
சிவமயம்

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் ஆனித்திங்கள் 26ஆம் நாள் இன்று (10.07.2006) திங்கட்கிழமை முற்பகல் 11.58 மணிமுதல் நண்பகல் 12.35 மணிவரையுள்ள சுபவேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**'Com - e'**

கையடக்கத் தொலைபேசி விற்பனையும் அதன் பின்னரான சேவைகளும், நிழற்பிரதி இயந்திர உதிரிப்பாக விற்பனை, பழுதுபார்த்தல் என்னும் வியாபார ஸ்தாபனத்தை இல.222, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஆரம்பித்து வைக்க திருவருள் கூடியுள்ளதால் அஞ்ஞான்றில் நடைபெறும் மங்கள நிகழ்வில் தாங்களும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

சம்பந்தர் கண்டி, காரைநகர். **நாகலிங்கம் பாலகிருஷ்ணன் குடும்பத்தினர்.**
(52057) (24-17-14)



## தேவை

பஜாஜ் Discover - 135 எலோவீல் மொடல் மோட்டார் சைக்கிள் உடன் தேவை. (52046) (18- 24-17-14)

கஜன் - 077 9006710


## சுயதொழில் செய்வதற்கு நிதியுதவி

கைதடி,ஜூலை10

வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத் துறைத் திணைக்களத்தினால் கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் 49 பேருக்குச் சுயதொழிலினை மேற்கொள்வதற்காக ரூபா பத்தாயிரம் வீதம் வழங்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவு பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகியோரில் தொழில் செய்வதற்குத் தகுதியானவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. (75)


## காப்புறுதித்துறையில் வேலைவாய்ப்பு

ISO 9001: 2000 சர்வதேச தரச்சான்றிதழ் பெற்ற இலங்கையின் முன்னணிக் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடிக் கிளைகளுக்கான பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

பதவிகள் - I - காப்புறுதிப் பயிலுநர்
II - அணி முகாமைத்துவ பயிலுநர்

தகைமை:

I. கணிதம்,தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி G.C.E.(O/L)
II. மொழியினைக் கையாளும் ஆற்றலும் சமூக நல்லுறவும்
III. பதவி II இற்கு வயது எல்லை 25 இற்கு மேல்
IV. காப்புறுதி அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**கொடுப்பனவுகள்:** திறமைக்கு ஏற்ப வருமானம், வெளிநாட்டு பயண வாய்ப்பு, பதவி உயர்வு, மாதாந்த, வருடாந்த பரிசில்கள்

விண்ணப்ப முடிவுதிகதி:- **14.07.2006**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

**விளம்பர இல. 2910 மே/பா உதயன்**

*குறிப்பு:* பதவிநிலை வேலை செய்ய விரும்பும் கிளை என்பனவற்றை தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

(52043) (24-17-14)



## Vacancies @ IIS CITY CAMPUS

We are on the look out for confident and committed individuals with the necessary qualifications for the following positions.

### LECTURERS

The Ideal candidate will hold a Masters Degree in Computer Science or Master of Business Administration in IT with minimum three years experience in IT.

Salary Rs. 20, 000.00 up wards.

### ASSISTANT LECTURERS

The Ideal candidate will posses an IT Degree, HND or equivalent professional qualification should have good presentation skills while relevant experience will be preferred.

Salary Rs.12, 000.00 up wards.

### INSTRUCTORS

Suitable young and energetic candidates possessing Diploma or Certificate from recognized Institutes here or abroad.

Salary will be paid according to their qualification and experience.

If you are confident that you satisfy the above requirements, please apply by sending your curriculum vitae along with the names, addresses and contact numbers of non-related referees to reach us within 10 days. Mark the post applied for on the top left hand corner of the envelope and address to.

The Manager - Human Resources
IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna.
Telephone No: 021-222 8060 E-mail: iiscc@sltnet.lk



## கலாலயா

**பயிற்சியகம்**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

*மகளிருக்கான துரித 1மாத / 3மாத பயிற்சிகள்*

* கேக் ஐஸிங் * கூந்தல் அலங்காரம் * உணவு தயாரித்தல்
* FABRIC PAINTING * பூ வேலை * கைவேலை
* FACIAL * சாறி பிளவுஸ், சல்வார், பஞ்சாபி தைத்தல்
* புதிதாகத் தையல் பழக விரும்புவோருக்கான தையல் வகுப்புகள்

இடைநிறுத்தப்பட்டிருந்த புதிய கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளுக்கான அனுமதிகள் மீண்டும் வழங்கப்படுகின்றன. புதிதாகச் சேர விரும்பும் மாணவிகள் தொடர்புகொள்ளவும்.

மேலும் விவரங்களை வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் நேரில் அறிந்துகொள்ளலாம்.

(சி/50138) (24-17-14) - பதிவாளர்.



## NEON SIGNS

வடபகுதியில் முதன்முதலில் பல வர்ணங்களில் நியோன் பெயர்ப்பலகைகளை செய்து வழங்குகின்றோம்

உங்களை வாழவைக்கும் இறைவனின் ஆலயகோபுரங்களில்


**ஓம் கணபதி ஓம் சிவாயநம**
**ஓம் சக்தி ஓம் முருகா**

முதலான நியோன் பல்ப் பெயர்ப்பலகைகளை யாழ்ப்பாணத்திலேயே வடிவமைத்து உங்கள் ஆலயங்களை அழகுபடுத்த தொடர்புகொள்ளுங்கள்

**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**
#212 கோவில் வீதி நல்லூர். யாழ்ப்பாணம் **021-222 9607**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்கு ஆதரவாக சென்னையில் திரண்ட தமிழ் உறவுகள்







இலங்கைத் தமிழரின் பாதுகாப்பை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைமையில் அனைத்துக் கட்சி பேரணி நேற்றுமுன்தினம் சென்னையில் நடைபெற்றது.

பேரணியை தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தொடக்கிவைத்தார். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச்செயலர் திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற இப்பேரணியில் ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலர் சத்தியா, தென். சென்னை மாவட்ட ம.தி.மு.க. செயலர் மணிமாறன் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், தமிழ் ஆர்வலர்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

## 'அக்னி-3' ஏவுகணை பரிசோதனை வெற்றி

ஒரிஸா, ஜூலை10

இந்தியாவின் அக்னி 3 ஏவுகணைப் பரிசோதனை நேற்று வெற்றிகரமாக [illegible]த்தப்பட்டது.

இந்தியா ஏற்கனவே அக்னி 1, அக்னி 2ஏவுகணைகளை ஏவிப் பரிசோதித்து வெற்றியும் கண்டது.

தற்போது நீண்டதூரம் (3ஆயிரத்து 500 கிலோ மீற்றர்) சென்று இலக்கைத் துல்லியமாகத் தாக்கும் அக்னி 3 என்ற ஏவுகணையையும் இந்தியா தயாரித்துள்ளது. இந்த ஏவுகணை நேற்று முற்பகல் 11 மணிக்கு ஒரிஸா மாநிலம் வீலர் சீவிலிருந்து ஏவப்பட்டது.

இந்தப் பரிசோதனை வெற்றியளித்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (202)

## இந்தியச் செய்திகள்

## முருகன் - நளினி உண்ணாவிரதம் தொடர்கின்றது

வேலூர்,ஜூலை 10

வேலூர் மத்திய சிறையில் ராஜீவ் காந்தி கொலையாளிகள் முருகன், நளினி இருவரும் கடந்த சனிக்கிழமையும் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

முருகன்- நளினி தம்பதியரின் மகள் அரித்திரா மேகராவுக்கு மத்திய அரசு உடனடியாக விசா வழங்கக்கோரி ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் முருகன் கடந்த 25 ஆம் திகதி முதலும் நளினி கடந்த 26 ஆம் திகதியிலிருந்தும் தொடர்ந்து வேலூர் மத்திய சிறையில் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

இருவரும் தண்ணீர் மட்டும் குடித்து வந்தனர். சோர்வடைந்ததால் முருகன், நளினி ஆகிய இருவரும் கடந்த வியாழக்கிழமை குளூகோஸ் ஏற்ற சிறைத் துறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இருவரும் தமது உண்ணாவிரதத்தை கைவிட மறுத்து விட்டனர். (202)

## இலங்கை கடற்படை கைதுசெய்த 10 இந்திய மீனவர்கள் விடுவிப்பு

தூத்துக்குடி, ஜூலை10

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தூத்துக்குடியைச் சேர்ந்த 10 மீனவர்களும் விடுவிக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை தமிழகம் திரும்பினர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தூத்துக்குடி திரேஸ்புரத்தைச் சேர்ந்த 10 மீனவர்கள் 2 நாட்டுப் படகுகளில் கடந்த,30ஆம் திகதி தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து மீன்பிடிக்கச் சென்றனர். ஆழ்கடலில் வீசிய பலத்த காற்று காரணமாக இவர்களது இரண்டு படகுகளும் திசைமாறி இலங்கை கடல் எல்லைக்குள் சென்று விட்டன. அப்போது அந்தப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் தூத்துக்குடி மீனவர்கள் 10பேரையும் அவர்களது 2 படகுகளையும் சிறைபிடித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில், மீனவர்கள் கரை திரும்பாததையடுத்து உறவினர்கள் அவர்களைத் தேட ஆரம்பித்தனர். அவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தகவல் கடந்த 4ஆம் திகதி தெரிவிக்கப்பட்டது. அவர்களை மீட்கக்கோரி மாவட்ட ஆட்சியர் அரபழனியாண்டியைச் சந்தித்து திரேஸ்புரம் மீனவர்கள் மனு அளித்தனர். மீனவர்களை மீட்க மத்திய, மாநில அரசுகள் தூதரக ரீதியாக நடவடிக்கை மேற் கொண்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (202)

## பொலீஸ் தடை உத்தரவை மீறிய முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கைது

காசியாபாத்,ஜூலை10


பொலீஸ் தடை உத்தரவையும் மீறி விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தச் சென்ற முன்னாள் பிரதமர் வி.பி.சிங் மற்றும் நாடாளுமன்ற எம்.பியான ராஜ்பாப்பர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:

இந்திய உத்தரப் பிரதேச காசியாபாத் மாவட்டம், தத்ரி என்ற இடத்தில் அனில் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் நிறுவனம் மிகப்பெரிய மின்சார நிலையத்தை அமைக்கவுள்ளது. இதற்காக அந்த பகுதியில் உள்ள இரண்டாயிர்த்து 500 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த மாநில முதல்வர் முலாயம் சிங் யாதவ் அனுமதி அளித்துள்ளார். நிலத்தை தந்த விவசாயிகள் தங்களுக்கு தற்போதைய் விலை அடிப்படையில் பணம் தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.கடந்த சனிக்கிழமை விவசாயிகளுக்கும் பொலீஸாருக்கும் மோதல் ஏற்பட்டது. இதில் 35 பொலீஸாரும், ஐந்து விவசாயிகளும் காயமடைந்தனர். இதனால் அங்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் முன்னாள் பிரதமரும் ஜன்மோர்ச்சா கட்சியின் தலைவருமான வி.பி.சிங், நாடாமன்ற உறுப்பினர் ராஜ்பாப்பர் மற்றும் அவரது ஆதரவாளர்.கள் 15 பேர் நேற்று விவசாயிகளுக்கு ஆதர வாக பேர்ராட்டம் நடத்த தவுலானா நோக்கி சென்றனர். அப்போது பொலீஸார் வி.பி.சிங், ராஜ்பாப்பர் மற்றும் அவரது ஆதரவாளர்களை கைது செய்தனர். வி.பி.சிங் மற்றும் ராஜ்பாப்பர் ஆகியோர் வசுந்தரா என்ற இடத்தில் வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என மாநில உள்துறை செயலர் சதீஷ்குமார் அகர்வால் தெரிவித்துள்ளார். (202)

## மத்திய அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொள்ளமாட்டேன்

### முதல்வர் கருணாநிதி விளக்கம்



சென்னை, ஜூலை10

மத்தியில் காங்கிரஸ் அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக நான் எச்சரிக்கை விடுக்கவில்லை - என்று முதல்வர் மு.கருணாநிதி விளக்கியுள்ளார்.


அவர் தனது விளக்கத்தை கேள்வி பதிலாக ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ளார்.

*கேள்வி:-* நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன பிரச்சினையில் நீங்கள் மத்திய காங்கிரஸ் அரசுக்குத் தரும் ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக எச்சரித்ததாக, சில பத்திரிகைகள் செய்தி வெளியிடுகின்றனவே, அது உண்மையா?

*பதில்:* எச்சரிக்கையோ மிரட்டலோ எதுவுமில்லை. அப்படிப்பட்ட தலைப்புகளை வடக்கிலும் தெற்கிலும் உள்ள சில பத்திரிகைகள் வெளியிட்டிருப்பது மிக மிகத் தவறானது.

இந்த நிலைமையில் மத்திய அமைச்சரவையில் தி.மு.க. நீடிப்பது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டேனே தவிர, மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்குத் தரும் ஆதரவையே விலக்கிக் கொள்ள வேண்டி வரும் என்று நான் கூறவேயில்லை.

நான் சொல்லாத ஒன்று நடக்க வேண்டு மென்றோ, அல்லது கூட்டணிக்குள் பிளவு எப்போது வரும் என்றோ காத்திருக்கும் கழுகுகளின் எதிர்பார்ப்புக்கு ஜனநாயகத்தை இரையாக்கிட நான் தயாராக இல்லை. பத்திரிகைகள் தேவையில்லாமல் இத்தகைய பதற்றமிகு செய்திகளைப் பரப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (202)



ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து ஜி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் இன்று விண்ணில் செலுத்தப்படவுள்ள இன்சாட் 4 சி செயற்கைக் கோள்.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை

## தடையை மீறி செல்லமுயன்ற கிருஷ்ணசாமி, திருமாவளவன் கைது

மதுரை,ஜூலை10

சிவகங்கை மாவட்டத்தில் பிரச்சினைக்குரிய இடமான கண்டதேவி இருக்கும் தேவகோட்டை பகுதிக்குள் கடந்த சனிக்கிழமை முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை நுழையக்கூடாது என்று புதிய தமிழகம் கிருஷ்ணசாமி, விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன் போன்றோருக்கு தடை இருக்கிறது. [illegible] செல்ல இருந்த இவர்களும் [illegible] பேரவையை சேர்ந்தவர்கள் உட்பட 217 பேர் மதுரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டு



திருமதி
**பரமேஸ்வரி செல்லத்துரை**
(S.L.Ts.1), BA-Dip.-in-Education
சேவை விவரம்
**01.11.1976 - 30.04.1986**
**குருநாகல் இந்து தமிழ்-வித்தி.**
**01.05.1986 - 10.07.2006**
யா/புலோலி மெ.மி.த.க பாடசாலை

*முப்பது ஆண்டுகள் சேவையாற்றி இன்று (10.07.2006) திங்கட்கிழமை தனது 60 ஆவது அகவையில் ஒய்வுபெறும் ஆசிரியை அவர்களை நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.* (52056)(26.14.45)

பாடசாலைச் சமூகம்,
யா/புலோலி மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலை, புலோலி.

# புகைப்படப்பிடிப்பாளருக்கான அறிவித்தல்

தற்கால சூழலில் புகைப்படத்துறைசார் பொருள்களின் விலை ஏற்றம் காரணமாக இன்று (10.07.2006) திங்கட்கிழமை தொடக்கம் பிரதியாக்கம் செய்யும் படச்சுருளுக்கு 4R அளவிலான புகைப்படப் பிரதி ஒன்றின் விலை15/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

**கொனிக்கா கலர் லாப் &**
**ஸ்ரீ டிஜிற்றல் கலர் லாப்**

இல. 14, ஸ்ரீ வெங்கடேசன் வீதி, (பெருமாள் கோயில் அருகில்), யாழ்ப்பாணம்.

கிளை - பிரதான வீதி, நெல்லியடி.

(52061)(26.11.45.18)

# புகைப்படப்பிடிப்பாளருக்கான அறிவித்தல்

தற்கால சூழலில் புகைப்படத்துறைசார் பொருள்களின் விலை ஏற்றம் காரணமாக இன்று (10.07.2006) திங்கட்கிழமை தொடக்கம் பிரதியாக்கம் செய்யும் படச்சுருளுக்கு 4R அளவிலான புகைப்படப் பிரதி ஒன்றின் விலை15/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

**ரவி டிஜிற்றல் கலர்லாப் &**
**சுப்பஸோ வீடியோ - ஓடியோ சென்ரர்**

இல.149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(52062)(18.26.11.45)

# புகைப்படப்பிடிப்பாளருக்கான அறிவித்தல்

தற்கால சூழலில் புகைப்படத்துறைசார் பொருள்களின் விலை ஏற்றம் காரணமாக இன்று (10.07.2006) திங்கட்கிழமை தொடக்கம் பிரதியாக்கம் செய்யும் படச்சுருளுக்கு 4R அளவிலான புகைப்படப் பிரதி ஒன்றின் விலை 15/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

**மூர்த்தி லேஸர்**
**டிஜிற்றல் கலர் லாப்**

இல.62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(52063)(18.26.11.45)

# புகைப்படப்பிடிப்பாளருக்கான அறிவித்தல்

தற்கால சூழலில் புகைப்படத்துறைசார் பொருள்களின் விலை ஏற்றம் காரணமாக இன்று (10.07.2006) திங்கட்கிழமை தொடக்கம் பிரதியாக்கம் செய்யும் படச்சுருளுக்கு 4R அளவிலான புகைப்படப் பிரதி ஒன்றின் விலை 15/- ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

**விஸ்டா விஷன்**
**டிஜிற்றல் கலர் லாப்**

இல.52,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(52064)(18.26.11.45)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வாடகைக்கு

திருநெல்வேலி பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் தளபாடங்களுடன் வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: **0777-217425, 0777291685, 011-2366450.** (52006)

## கடை வாடகைக்கு

நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணத்தில் **Suntel T.Phone**, கடைத் தளபாடங்கள் மற்றும் கைத்தொலை பேசி உபகரணங்களுடன் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: 978, கே.கே.எஸ்.வீதி, நாச்சி மார் கோயிலடி, யாழ்ப்பாணம். (52052)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1973, திருவோணம் 2ஆம் பாதம் கிரகபாவம் 43¾ 8 இல் செவ்வாய் கொண்ட பட்டதாரி ஆசிரியருக்கு அரச தொழில் புரியும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல.2909, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (51793)

## கோழிக்குஞ்சு விநியோகம்


பகிரா புறொயிலர் குஞ்சுகள் 12.07.06 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் - ஆனைக்கோட்டைச்சந்தி, தாரகை - பருத்தித்துறை, **P.**ரவி - சாவகச்சேரி, றாஜீவ் கால்நடை தீவன விற்பனை நிலையம் - மாதகல் வீதி, பண்டத்தரிப்பு, நாகம்ஸ் பாம் - வட்டுக்கோட்டை, மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சுன்னாகம், கோண்டாவில், கோப்பாய் ஆகிய கால்நடைச் சங்கக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். **T.P. 222 3529, 222 2867.** (51999)

## வைத்தியம்

மருந்து மாத்திரைகள் எடுத்து நோய் தீரவில்லையா? சலரோகம், உயர் இரத்த அழுத்தம், நாள்பட்ட நோய்கள், இருதயக் கோளாறுகள் போன்ற எவ்வகையான நோய்களுக்கும் சீன-அக்குபன்ச்சர் சிகிச்சை மூலம் நிரந்தரத் தீர்வு. விவரங்கள் பெற அழையுங்கள். **T.P.0777491062** தபால் பெட்டி சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (52060)

# துயர்பகிர்கின்றோம்

**திருமதி சுந்தரம் செல்லத்துரை**



ஏழாலை வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பிகை தேவஸ்தானத்தின் ஸ்தாபகராகிய அம்மன் தாயாரின் அன்புத்தாய் திருமதி சுந்தரம் செல்லத்துரை அம்மையாரின் இழப்பால் துயருறும் அனைவரும் மனச் சாந்தி பெறவும் அன்னையை வேண்டுகிறோம்.

ஆ.சாந்தலிங்கம்
குடும்பத்தினர்.
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
(52059)
(26.11.45)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

வடமராட்சி இநது மகளிர் கல்லூரியின் பாட சாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

## வீடற்றவன் நாவல்

வீடற்றவன் நாவலின் கதைச்சுருக்கம், விளக்கம், விமர்சனம், எல்லாவகை இலக்கியங்களும் படைத்த ஆராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. இந்த நூலைப் படித்தால், வீடற்றவனில் எந்த வினாவிற்கும் விடை எழுதலாம். (52065)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சத்தியலிங்கம் **V7** செல்லத்துரை வீதி, உரும்பிராய் தெற்கு. **T.P. 0779184455.** (52099)

# மனோதத்துவ வைத்தியம்

**(GENERAL PSYCHO THERAPY)**
**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்**

**10.07.2006 - 14.07.2006**
**(4 நாள்கள் மட்டும்)**

**முன்கூட்டியே பதிவுசெய்யவும்**

**இளைஞர்களே!**
**✱ சக்தி குறைவு ✱ ஞாபக மறதி ✱ பயம் ✱ நடுக்கம்**
**✱ நித்திரைக்குறைவு ✱ ஆண்மைக்குறைவு ✱ நீரிழிவுநோய்**

*என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?*

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மை சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

*குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்*

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி, 392/A , மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)
Govt.Regd.No.9492
Hot Line 0777569205, T.P.: 3181, 5399
**(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)**

(சி/50131)(26.14.45)

## மணவாளக்கோல விழா

கொடிகாமம் சந்தையடி அருள்மிகு காளி தேவஸ்தான மணவாளக் கோல விழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகளுடன் சுவாமி நகர் வலம் வருதல் இடம்பெறும். (203-31)

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னுத்துரை தங்கமணி



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை தங்கமணி அவர்கள் நேற்று (09.07.2006) ஞாயிற்றுக்கிழமை இறை பதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா- சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சுப்பிரமணிம் (காலஞ்சென்ற), கமலாதேவி, சண்முகலிங்கம் (சண்முகம்), மல்லிகாதேவி, விஜயரத்தினம் (அப்பு - கனடா), றெஜினாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் பாக்கியலட்சுமி , துரைராஜசிங்கம், கமலலோசினி, திருநாவுக்கரசு, இராஜேஸ்வரி (கனடா), சோதிமூர்த்தி (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோரின் அன்பு மாமியும் சுதன், அச்சுதன், பற்மசுதன்,யோகராசா, கோகிலசுதன், ஜெகதீஸ்வரன்(பிரான்ஸ்), வாகீஸ்வரன், சதீஸ்வரன் (லண்டன்), சதீஸ், சபேஸ், மலர்விழி (கனடா),வித்தியா (கனடா), மயூரன் (கனடா), தனஞ்சியன், வாசுகி, தயானந்தி, மோகனராணி, தேவகி, நர்மதா, ஜெயதர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்ஷாயினி, மதுசன், யதுகரன், குவாயினி, மகிஷாயினி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (10-07-2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தக்னக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.* (52058)(18.14.45.26)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராஜரட்ணம் விஜயகுமார்**
(கோப்பாய் விஜி)
(நெச்சுரல் லங்கா ரவல்ஸ் - உரிமையாளர்)

மண்ணில் 23.12.1959 | விண்ணில் 10.07.2005

**மானுலகம் நீத்திட்ட மாமாவே!**
**வானுறைந்து ஓராண்டு முடிந்துளதோ!**
**தேனுறையும் பேச்சில் தித்திக்கும் புன்சிரிப்பில்**
**தினந்தோறும் நினைவுகளில் நிழலாக நீங்கள்**
**பாசமிகு உறவுகளின் கனவுகளில் - மாமா**
**உங்கள் நேசமுகம் தெரிகிறது.**

கோப்பாய். **சரவணன்** *(மருமகன்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைச்சிக்காக நிறைமாதப் பசுமாட்டைத் திருடியோர் அதன் வயிற்றைக் கிழித்து கன்றை வெளியே எறிந்தனர்

## ஊர்காவற்றுறையில் கொடூரம்

யாழ்ப்பாணம்,ஜூலை10

நிறைமாத பசு ஒன்றைத் திருடியவர்கள், அதன் வயிற்றைக் கிழித்து அதனுள் இருந்த கன்றினை வெளியே எறிந்துவிட்டு பசுமாட்டினை இறைச்சிக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஊர்காவற்றுறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

ஊர்காவற்றுறை கொத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த கோபாலசிங்கம் அந்தோனிப்பிள்ளை என்பவரது நிறைமாத பசுமாடு கடந்த வெள்ளியன்று காணாமல் போயிருந்தது.

இந்த நிலையில், ஊர்காவற்றுறை நகருக்குச் சமீபமாக, அப்பகுதியில் பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படும் கொல்களம் அருகே இறந்த நிலையில் பசுக்கன்று ஒன்றும் வெட்டப்பட்ட மாடு ஒன்றின் எச்சங்களும் கிடப்பதாக ஊரவர்கள் தகவல் தெரிவித்தனர்.

பசுமாட்டின் உரிமையாளர் அங்கு சென்று வெட்டப்பட்ட மாட்டின் எச்சங்களைக்கொண்டு அது தனது பசுமாடு என்பதைப் புரிந்துகொண்டார்.

இதனையடுத்து இறைச்சிக்காக வெட்டப்பட்ட பசுவின் கால், தோல் முதலிய தடயப் பொருள்களை எடுத்துச்சென்ற பசுவின் உரிமையாளர், அவற்றை ஊர்காவற்றுறை பொலிஸில் ஒப்படைத்ததுடன் தமக்கு நீதி கிடைக்க ஆவன செய்யுமாறும் முறையிட்டார்.

பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கால்நடைகள் திருடப்படுவதும், பின்னர் அவை கண்ட கண்ட இடங்களில் வைத்து இறைச்சிக்காக வெட்டப்பட்டு அவற்றின் எச்சங்கள் கண்டவாறு வீசப்படுவதும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இதனைத் தடுப்பதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று - பிரதேச கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தமிழகம் செல்ல முயன்ற 6 பேர் கடற்படையால் கைது

தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் செல்ல முயன்ற 6 தமிழர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்று இராணுவம் அறிவித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அவர்கள் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் செல்லுமாறு தமிழர்களை விடுதலைப் புலிகள் வற்புறுத்தி அரச படைகளுக்கு எதிரான பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர் எனவும்-

இராணுவத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு கடந்த 6 மாதங்களில் மட்டும் 5 ஆயிரம் பேர் அகதிகளாகச் சென்றுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ம)


## பரீட்சைகள் ஆரம்பம்

கலாலயா பயிற்சியகத்தில் கடந்த பிரிவில் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவிகளுக்கான பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளன. அது விடயமான அறிவுறுத்தல்களை எதிர்வரும் 11.07.2006 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

(சி-50137) -பதிவாளர்.


## இளைஞர், யுவதிகளுக்கு கணனிப் பயிற்சி வழங்க ஏற்பாடு

நல்லூர், ஜூலை10

நாயன்மார்கட்டு பாரதிமன்ற சனசமூக நிலையம், படித்து தொழில் வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்குக் கணனிப் பயிற்சி மற்றும் கணனி இயந்திரம் பழுது பார்த்தலுக்கான பயிற்சி என்பவற்றை வழங்கவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி இந்தப் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் -

18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்,யுவதிகள் 30 பேருக்கு இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்ளக் கூடியதாக வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன. என்றும் - நிலையத்தின் செயலாளர் வ.அன்பழகன் தெரிவித்துள்ளார்.

பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப்படிவங்களை பாரதி மன்ற சனசமூக நிலையத்திற்கு அனுப்பி வைக்கமுடியும் என்றும் - அவர் மேலும் கூறினார். (111)

## வலிகாம வலய ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கவில்லை

வலி.வடக்கு, ஜூலை10

வலிகாமம் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத் திட்டத்தின் கீழ் இம்மாதம் சம்பளம் வழங்கப்படவில்லையென விசனம் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த சிந்தனையின் கீழ் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் புதிய சம்பளத்தை உடன் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் குறிப்பிட்ட வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது புதிய சம்பள உயர்வைப் பெற்றுள்ள போதிலும், ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த சம்பள உயர்ச்சி வழங்கப்படவில்லையென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (86)

## கைதடி தபாலகத்துக்கு அடிக்கல் நடப்பட்டது

தென்மராட்சி, ஜூலை10

கைதடி அஞ்சல் அலுவலகத்திற்கு புதிய நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நேற்றுமுன்தினம் நடப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அடிக்கற்களை நட்டு வைத்தனர்.

கைதடி கிழக்கு வீரபத்திரர் கோவிலுக்கு அருகில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிகழ்வில் வட மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வீ. குமரகுரு, தென்மராட்சி உதவி பிரதேச செயலர் திருமதி ம. சாந்தசீலன் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (117)

## சமூர்த்தி வங்கிகளுக்கு கணனிகள் கிடைக்கும்

தென்மராட்சி, ஜூலை10

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த கைதடி, கொடிகாமம் ஆகிய சமூர்த்தி வங்கிச் சங்கங்களுக்கு கணனி இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு நிதி ஒதுக்கீட்டில் கணனிகள் கொள்வனவு செய்ய நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். (117)


பொருளியல்
Mr.B.கஜீதரன்
07 - Mon 3 - 5
Thurs 4.30 - 6 p.m.
Sat 6 - 7 a.m.
08 - Mon 5 p.m.
Wed 4 p.m.
* DRAMA
HINDUC
SHAMROCK
ஈச்சமோட்டை



## தாங்கொணாத் துயரில் பங்குகொள்கிறோம்

எமது ஆலய பரிபாலன சபையின்
துணைச் செயலாளர்
கந்தையா ஞானச்சந்திரன் (ஞானி)
அவர்களின் அருமைத் தாய்
கந்தையா ஞானசுந்தரி
அவர்களின் மறைவையொட்டி அன்னைக்கு அஞ்சலி மலர்கள் தூவிக் குடும்பத்தவரின் தாங்கொணாத் துயரில் பங்கும் கொள்கிறோம்.

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி
ஆலய பரிபாலன சபையினர்.



## கண்ணீர் அஞ்சலி



குரும்பசிட்டியைப்
பிறப்பிடமாகவும் நாச்சிமார்
கோயிலடியை வசிப்பிடமாகவும்
கொண்ட
சுப்பிரமணியம் - மீனாச்சி
தம்பதியரின் பாசமிகு மகன்
சு. அருமைநாயகம்
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

தகவல்:
த.குணசிங்கம்
மாருதி பேனிச்சர்
கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

அன்னாரின்
இலங்கை சகோதரியும்,
மருமக்களும் (ஜேர்மன், லிண்டன், நோர்வே).

(52075)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 . 04 . 1945



உதிர்வு 21 . 06 . 2005

அமரர் நாகரத்தினம் தம்பிராஜா (ஆசாரியார்)
(திதி: சதுர்த்தசி)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து எமையெல்லாம்
இத்தரணியில் வாழ வழி வகுத்த எமதன்பு அப்பாவே!
எம்மிடமிருந்து காலனும் உமைப்பிரித்து
ஆண்டு ஒன்று உருண்டோடியதோ? நெஞ்சமோ
மறக்கமுடியவில்லை அப்பா! நினைவோ அழியவில்லை அப்பா!
அன்பையும் அறிவையும் பாசத்தையும் பொழிந்த நீங்கள் எம்மை
எல்லாம் நல்வழிப்படுத்தி எம் உயர்வுக்கு எம்முடன்
இருப்பீர்கள் என நினைத்தோம் ஏமாற்றி விட்டு ஒரு நொடியில்
எம்மைப் பிரிந்தது ஏன் அப்பா? உங்கள் நினைவுகளை
சுமந்து நிற்கின்றோம்!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்.

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

(52079)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கருணாலய
முகாமைப்பாளர் ஞானச்சந்திரன் அவர்களின்
அன்புத் தாய்
கந்தையா ஞானசுந்தரி
அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
நா. பிறேம மாலா.

(52076)



## மரண அறிவித்தல்கள்

### கந்தையா ஞானசுந்தரி



கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஞானசுந்தரி நேற்று (09.07.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நுணாவில் மேற்கை சேர்ந்த கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா (ஆசிரியர்) - நாகம்மா தம்பதியரின் இளைய புத்திரியும் நாகரத்தினம், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, நமசிவாயம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானராஜன் (ஜேர்மனி), ஞானச்சந்திரன் (நிர்வாகி, கருணாலயம் திருநெல்வேலி), ஞானறஞ்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஞானரதி மற்றும் ஞானேஸ்வரி (கொழும்பு), ஞானசீலன் (சுவிஸ்), ஞானபூபதி, காலஞ்சென்ற இந்திரன், சொர்ணராஜா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராணி, யோகேஸ்வரி, சற்குணநாதன் சுகந்தி, நகுலேஸ்வரராஜா (முன்னாள் ஆசிரிய ஆலோசகர்) ஆகியோரின் அன்பு மாமியும் சபேஷன், சதிஷன், சுதர்ஷன், அபிராமி, ஆரணி, ஞானகீர்த்தி, சாதனா, சபீனா, பாரதி, தேவகி, முரளிகிருஷ்ணா, கோபிகிருஷ்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானோதயம்,*
*இல. 19 சம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(52078)

### திருமதி சின்னையா மகிழம்மா

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த திருமதி சின்னையா மகிழம்மா நேற்றுக்காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும் அம்பலவாணர் - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும் மாணிக்கராஜா, மகேந்திரராஜா, பரமேஸ்வரி, புலேந்திரராஜா (பிரான்ஸ்), சுதாகரன், சூரியகலா ஆகியோரின் அன்புத் தாயும் இராசமணி, பாமதி, கந்தையா, குணவதி (பிரான்ஸ்), தங்கமலர், திருச்செல்வம் ஆகியோரின் மாமியும் ஸ்ரீதரன் (பாஹ்ரெய்ன்), தயாளினி (ஆசிரியை - சாவகச்சேரி மகளிர் கல்லூரி), தர்மினி, தர்சினி, வனித்தா, எழில்சோபா, ஸ்ரீக்காந்தன் (பிரான்ஸ்), ஜெயக்காந்தன் (பிரான்ஸ்), ஜீவகாந்தன் (ஜெயந்தி ஜூவலர்ஸ்), நிமல்க்காந்தன் (ஜெயந்தி ஜூவலர்ஸ்), துஷ்யந்தி, ஜெயந்தி, தர்சினி (பிரான்ஸ்), ஷாமினி (பிரான்ஸ்), கிரிசாந்தன், லிதிசாந்தன், கவிசாந்தன், நிசாந்தன், ஹரிஹரன், தர்சன், ஜெயதாஸன், ஜனனி, அனிற்றா ரஜனி (பிரான்ஸ்), சுகசுதா, விக்னேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*57/30, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து பேச்சை விரைவில் தொடங்கவேண்டும்

## சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் கூறுகிறார்

வன்செயல்கள் இனியும் நாட்டுக்குத் தேவையில்லை. நகரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நீதியான, நியாயமான சரிநிகர் சமமான தீர்வொன்றைக் காணும்பொருட்டு உட்கார்ந்து பேச முன்வரவேண்டும். இரு தரப்பாரையும் பேச்சு மேசைக்குகொண்டுவருவதற்கான சகல முயற்சிகளையும் நான் எடுத்துக் கொண்டே இருக்கிறேன் என்று இலங்கை சமாதானச் செயலகத்தின் செயலாளலர் நாயகமாகிய டாக்டர் பாலித ஹோகன தெரிவிக்கிறார்.

அரசு இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக என்ன யோசனைகளை முன்வைத்தாலும், விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தத் தீர்வும் நடைமுறைக்கு வருவது சாத்தியமில்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கையின்இன்றைய அரசியல்நிலைமை வன்செயல்களின் அதிகரிப்பு, இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி தொடர்பாக டாக்டர் பாலித ஹோகன இணையத்தளத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பதாவது:-

விடுதலைப் புலிகளும் பேச்சுக்குத் தயார் என்கிறார்கள், அரசுத் தரப்பிலும் அவ்வாறே தெரிவிக்கப்படுகிறது. எந்த இடத்திலிருந்து இந்தப் பேச்சு ஆரம்பிப்பது என்பது பிரச்சினை இல்லை.

அரசைப் பொறுத்தமட்டில் அதி முக்கியமான விஷயங்களை முதலில் எடுத்து பேச்சை ஆரம்பிக்க விரும்புகிறது. முதலில் அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயத்தைப் பற்றி பேசலாம். ஜனநாயகத்தை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு விரிவாக்கம் செய்வது தொடர்பாகப் பேசலாம், மாற்று அரசியல் கருத்துக் கொண்டோரின் கருத்துகளுக்கு மதிப்பளிப்பது, பல கட்சி ஜனநாயகத்துக்கு ஊக்கமளிப் பதுப் பற்றி எல்லாம் பேசலாம் - என்றார்.

# யுத்தநிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்வதா புலிகளின் நோக்கம்?

## கண்காணிப்புக் குழுவின் தலைவர் கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 10

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிலுள்ள ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் குழுவிலிருந்து வெளியேறி விடவேண்டும் என்று விடுதலைப்புலிகள் காலக்கெடு விதித்து கோரியிருப்பதில் எதுவித நியாயமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. கோரிக்கையில் புலிகள் அழுங்குப் பிடியாக இருப்பார்களேயானால் அது யுத்த நிறுத்த உடன்படிக்கை ரத்துச்செய்யப்படுவதையே புலிகள் வேண்டிநிற்கிறார்கள் என்று அர்த்தப்படுத்திவிடும் என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளின் இந்தக் கோரிக்கை காரணமாக கண்காணிப்புக் குழுவினரின் எதிர்காலமே ஊசலாடுகிறது என்றும் அவர் கூறுகிறார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கண்காணிப்புக்குழு பற்றி அளித்தபேட்டியில்தலைவர் உல்வ் ஹென்றிக்ஸன் மேலும் தெரிவித்ததாவது:-

''கண்காணிப்புக் குழுவில் நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளாக இங்கு வரவில்லை. பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி ஐரோப்பிய ஒன்றியம் தங்களைத் தடை செய்திருப்பதால். டென்மார்க், பின்லாந்து, சுவீடன் போன்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் கண்காணிப்புக் குழுவில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது அவர்களின் செயற்பாடுகள் மீது சந்தேகத்தைத் தருவதாகவே இருக்கும் என்று புலிகள் கூறுவதில் எதுவித நியாயமும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

இந்த நாடுகளின் பிரதிநிதிகளாக நாங்கள் இங்கு வரவில்லை - எம்மீது சந்தேகிப்பதற்கு!

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் 3.5 சரத்தின்படி கண்காணிப்புக்குழுவானது நோர்ட்டிக் நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாகவே இருக்கவேண்டும் என்பது நியதி. அத்தோடு அரசும் நோர்வேயுடன் கண்காணிப்புக் குழுவின் அந்தஸ்து தொடர்பாக உடன்படிக்கை ஒன்றைச் செய்திருக்கிறது.

எனவே கண்காணிப்புக் குழுவின் உறுப்புரிமையில் ஏதாவது மாற்றம் செய்யவேண்டுமானால். அதாவது நோர்ட்டிக் அல்லாத நாடுகளிலிருந்து கண்காணிப்புக் குழுவுக்கு உறுப்பினர்களைச் சேர்க்கவேண்டும் என்றால் மேலே சொன்ன இரண்டு உடன்படிக்கைகளுக்கும் திருத்தங்கள் கொண்டுவர வேண்டும்.

இரு தரப்பு உடன்படிக்கையைக் கையில் எடுத்துக்கொண்டு ஒரு தலைப்பட்சமான முறையில் திருத்தங்களைக் கொண்டுவந்து விட முடியாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை என்பது ஒரு பொதி. நீங்கள் அதனை முழுமையாகவே எடுக்க வேண்டும் அல்லது முழுமையாகவே விலக்கிவிடவேண்டும். செப்டம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க மாட்டோம் என்று புலிகள் கூறியிருக்கிறார்கள். இது பற்றி ஒஸ்லோவில் கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி நடந்த நோர்ட்டிக் நாடுகளின் கூட்டத்தில் நாங்கள் விரிவாக ஆராய்ந்தோம். மறுஅறிவித்தல் வரை கண்காணிப்புக் குழுவின் பணிகளைத் தொடர்வது என்று கூட்டத்தில் ஏகமனதாகத் தெரிவிக்கப்பட்டது.

- இவ்வாறு கண்காணிப்புக் குழுவின் தலைவர் கூறினார்.

கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ள பிரதம ஆளனி அதிகாரியான டொம்மி லக்கி மேயரின் பதவிக் காலம் அடுத்த மாதத்துடன் முடிவடைகிறது.

இவர் ஒரு சுவீடன் பிரஜை. இவர் விலகியதும் இவரது இந்த இரண்டாவது ஸ்தானத்துக்கு நோர்வேக்காரர் ஒருவரை நியமிப்பதற்கு அனுசரணையாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹென்றிக்ஸன் ஒரு சுவீடன் நாட்டவர். செப்டம்பர் முதலாம் திகதியுடன் இவர் விலக நேர்ந்தால் புதிதாக இரண்டாம் இடத்துக்கு நியமிக்கப்படவிருக்கும் நோர்வேக்காரர் கண்காணிப்புக் குழுவின் தலைமைப் பதவிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுவார் என்று கூறப்பட்டது.

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவிலியன் ஒருவர் வழங்கிய தகவல் ஒன்றையடுத்தே இவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. இவற்றை மறைத்து வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் அவரை விசாரணை செய்து வருகின்றனர். (ஐ)

### சிப்பா ...

(முத லாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் குறித்து நீதிவான் உடனடியாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் நீதித் துறையின் உயர் மட்டத்திற்கும் விடயம் தெரியப்படுத்தப்பட்டது. இதனை அடுத்து விரைந்து நடவடிக்கை எடுத்த யாழ்.பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று படையினரைக் கைது செய்தனர். நேற்று நள்ளிரவுவரை பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டனர் என்று யாழ்.பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - கைதுசெய்யப்பட்டவர்களில் ஜாலிய கமகே நிஷந்த என்ற சிப்பாய் ஒருவர் மட்டும் நேற்று நள்ளிரவு யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 11ஆம் திகதி வரைக்கும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம)

### அருத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளன. அமைச்சரவை மறுசீரமைப்புக் குறித்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதி கண்டி யில் தனக்கு நெருக்கமானவர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

அடுத்தவாரம் இடம்பெறும் இந்த மாற்றத்தின்போது தற்போது பிரதியமைச்சர்களாக இருக்கும் பலருக்கு அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சுப் பொறுப்புகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுபநேரத்தில் இந்த மறுசீரமைப்பைச் செய்ய ஜனாதிபதி விரும்புவதால் அதற்கான நேரம்பார்த்து அவர் காத்திருக்கிறார் என்று சில வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

### பதில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வாரம் கழிந்த நிலையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் சிகிச்சைகளை முடித்துக்கொண்டு சிலதினங்களுக்குள் இராணுவத் தளபதி நாடு திரும்புவாரென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் சத்திரசிகிச்சையொன்றுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டதையடுத்து நாடு திரும்புவதில் கால தாமதம் ஏற்படுவதால் இந்த பதில் நியமனத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கியிருக்கிறார்.

சரத் பொன்சேகா நாடு திரும்பும்வரை பதில் தளபதியாகக் கடமையாற்றும் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி இராணுவத் தளபதிக்குள்ள முக்கிய அதிகாரங்கள் சிலவற்றைப் பயன்படுத்த முடியாதென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றார். பின்பு மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசிபெற்ற ஜனாதிபதி நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் அந்தக் காரைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்று சுடமுயற்சித்தனர் என்று கூறப்படுகிறது.

அச்சமயம் சாரதியுடன் நீதிவானுக்குரிய பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காரில் இருந்துள்ளார்.

நீதிவானின் மகளை கல்வி நிலையத்தில் இறக்கிவிட்டு திரும்பும் வழியில் - பரமேஸ்வரா சந்திப்பகுதியில் - கடமையில் இருந்த படையினர் - காரின் உள்ளே பொலிஸ் உத்தியோகத்தர் இருப்பதைக் கண்டுள்ளனர். அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரும், படையினரைப் பார்த்து தலையசைத்து நீதிவானின் கார் என்பதை உறுதிப்படுத்தினார் என்று கூறப்படுகிறது.

பின்னர் கார் பலாலி வீதியில் - கந்தர்மடம் பக்கமாக - சிறிது தூரம் சென்ற நிலையில் - துப்பாக்கிகளைத் தூக்கிப் பிடித்தவாறே படையினர் அதன் பின்னால் துரத்தத் தொடங்கினர் என்றும் - அவ்வாறு துரத்திச் சென்ற சிப்பாய்களில் ஒருவர் வீதியில் வந்த முச்சக்கர வண்டி ஒன்றில் துப்பாக்கியுடன் ஏறி காரை பின்தொடர்ந்து துரத்திச் சென்றார் என்றும் - கூறப்படுகிறது.

கார் ஒன்றைப் படையினர் சுடுவதற்காகத் துரத்திச் செல்வதைக் கண்ட பொதுமக்கள் அது நீதிவானின் கார் என்பதை அடையாளம் கண்டுகொண்டனர். உடனேயே 'நீதிவானின் கார்' என்று அவர்கள் குரல் எழுப்பி படையினரை மறிக்க முயன்றனர். வீதியில் நின்ற மக்கள் தமிழிலும் சிங்களத்திலும் குரல் எழுப்பி அது நீதிவானின் கார் என்பதைப் படையினருக்குப் புரியவைக்க முயன்றுள்ளனர். எனினும் படையினர் தொடர்ந்தும் காரை துரத்திச் சென்றுகொண்டிருந்தனர்.

அச்சமயம் வீதியில் பயணிகளை ஏற்றி வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்றின் சாரதி படையினர் ஓட்டோவில் கார் ஒன்றைத் துரத்திச் செல்வதைக் கண்டுகொண்டார். உடனடியாக அவதானமாகச் செயற்பட்ட அந்த மினிபஸ் சாரதி, படையினரின் ஓட்டோவை முந்திச் சென்று நீதிவானின் காரின் அருகே போய் அதனை நிறுத்துமாறு அதன் சாரதிக்கு சைகை காட்டி எச்சரிக்கை செய்தார் என்று கூறப்படுகிறது. உடனடியாகவே காரை நிறுத்திய அதன் சாரதியும், பொலிஸ் உத்தியோகத்தரும் அதிலிருந்து இறங்கினர். அவர்களைப் பின்தொடர்ந்து துரத்தி வந்த படையினர் அவர்களை நெருங்கி வந்து கடுமையாக மிரட்டினர் என்று கூறப்படுகிறது.

அது நீதிவானின் கார் என்பதை பொலிஸ் உத்தியோகத்தர் படையினரிடம் எடுத்துக் கூறியபோதிலும்சந்தேகத்துக்கிடமான எந்த வாகனத்தையும் தடுப்பதற்கும், அதன்மீது தாக்கு தல் நடத்துவதற்கும் தங்களுக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாகக் கூறி சிப்பாய்கள் அவருடன் வாக்குவாதப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

ஒரு கட்டத்தில் அந்த பொலிஸ் உத்தியோகத்தரைச் சுடப்போவதாகவும் படையினர் மிரட்டல் விடுத்தனர் எனவும் கூறப்படுகிறது.

நீதிவானின் காரின் கண்ணாடிகள் உருமறைப்புக் கண்ணாடிகள் போன்று இருந்ததை அவதானித்தே அதனைத் தாங்கள் தடுக்க முயன்றனர் என்றும் படையினர் தரப்பில் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்த வேளை தமது இல்லத்தில் தங்கி இருந்த நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவம் பற்றி அறிந்து உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார்.

காரை பின் தொடர்ந்து துரத்தி வந்த படையினரிடம் தனது விவரங்களைத் தெரிவித்தார். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பயணம் செய்த காரை தடுத்து நிறுத்த முயன்றது ஏன் என்று நீதிவான் படையினரிடம் கேள்வி எழுப்பினார்.

சந்தேகத்துக்கிடமான எந்த வாகனங்களையும் - அதில் எவர் பயணம் செய்தாலும் கூட - தடுத்து நிறுத்தவும் தேவையேற்படின் தாக்குதல் நடத்தவும் எங்களுக்கு (படையினருக்கு) உத்தரவிடப்பட்டிருக்கிறது. உத்தரவின்படி நாங்கள் செயற்படுகின்றோம். நீங்கள் மேலதிகாரிகளிடம் போய் சொல்லுங்கள் என்று படையினர் நீதிவானிடம் கூறியிருக்கின்றனர்.

சந்தேகத்தை உறுதிப்படுத்தாமல் தண்டனை வழங்குவதற்கு இந்த நாட்டின் சட்டங்கள் எதிலும் படையினருக்கு அதிகாரமளிக்கப்படவில்லை என்று கடுந்தொனியில் சிப்பாய்களுக்கு அறிவுறுத்திய நீதிவான், உடனடியாக அங்கிருந்து யாழ்.பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார்.

சட்டவிதிகள், ஒழுங்குகளை அறிந்திராத படையினர் வீதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்று தனது முறைப்பாட்டில் நீதிவான் குறிப்பிட்டுள்ளார்.

தனது வாகனத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு எத்தனிக்கப்பட்ட இந்த முயற்சி குறித்து உயர் படை அதிகாரிகளுக்கும், நீதித்துறை சார்ந்தவர்களுக்கும் முறையிட்டிருக்கிறார் என நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் இடம் பெறும் மனித உரிமை மீறல்கள், பொதுமக்கள் பாதிக்கப்படும் வகையிலான பாதுகாப்புப் படையினரின் அத்துமீறல்கள் தொடர்பாக அண்மைக் காலத்தில் நீதிமன்றம் ஊடாகக் கடும் நடவடிக்கைகளை ஏற்படுத்தியிருந்தார் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன். படையினர் ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மீறி வருவதைச் சுட்டிக் காட்டி அவற்றைப் பேணி உறுதிப்படுத்த வேண்டும் என்று குடாநாட்டு படைத்தலைமைக்கு கடுந்தொனியில் அறிவுறுத்தல்களையும் அவர் வழங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தனது காரில் பயணித்தவர்களின் உயிர்களைப் பொதுமக்களே காப்பாற்றினர் என்று நீதிவான் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

''அவர்கள் கூச்சலிட்டிருக்கவில்லையேல் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருக்கும். அதனைத் தடுத்து நிறுத்திய பொது மக்களுக்கு நான் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.'' - என்று கூறினார் நீதிவான். (ம)

இந்து நாகரிகம் - I
வினா - விடை நூல்,
By. செ. ஜெயக்குமார் B.A. (Hons)
கிடைக்கும் இடங்கள்
D.C.M. - யாழ். நகர், BECON - யாழ். நகர்
யூனிவேர்சல் - யாழ்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, ஸ்ரீ லங்கா புத்தகசாலை.

Diploma in Auto CAD
(With Manual Drawing)
10.07.2006 வரை 50% சலுகை
MCS
Supported By UNDP/JRRP
மேலதிக விபரங்களுக்கு 324, Palaly Road, Jaffna

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.07.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org